# வாகை

கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக கலாசார விழா சிறப்பு மலர் - 2008

## கலாசார விழா சிறப்பு மலர்




கோறளைப்பற்று வடக்கு
பிரதேச செயலக கலாசார விழா - 2008
கலாசார பேரவை
பிரதேச செயலகம் - வாகரை

# வாகை

# கலாசார விழா சிறப்பு மலர்

# 2008

"தமிழர்தம் கலைகள் யாவும்
தரணியில் மிளிரச் செய்வோம்"

வெளியீடு : 01

கலாசார பேரவை
பிரதேச செயலகம்
கோறளைப்பற்று வடக்கு
வாகரை.

# RAMAKRISHNA MISSION (Ceylon Branch)
**Batticaloa Sri Lanka**
**T.P. 065 - 2222752**




## சுவாமி அஜராத்மானந்தா அவர்களின்

# ஆசிச் செய்தி

கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தினால் நடாத்தவிருக்கும் கலாசார விழா தொடர்பாக, சிறப்பிதழ் வெளியிட தீர்மானித்திருப்பதை அறிய மகிழ்ச்சி.

இத்தகைய நிகழ்வுகள் மக்களின் கலை கலாச்சாரம் விழிப்புற்று விளங்க தூண்டுகோலாய் அமையும். ஒரு சமுதாயத்தின் பெருமையை எடுத்துக்கூறும் முக்கிய அடையாளங்களாக விளங்குவது அச்சமுதாயத்தின் கலாசார விழுமியங்களாகும்.

நமது கலாச்சாரத்தில் உயர் மனித விழுமியங்கள் புதைந்து கிடக்கின்றன. அவைகளை நம் இளம் சந்தயினர்க்கு அறிமுகப்படுத்துவது கலாசாரப் பேரவை போன்ற அமைப்புகளின் தலையாய கடமையாகும். இது போன்ற நிறுவனங்கள் இத்தகைய விழாக்களை ஏற்பாடு செய்வதன் மூலம் கலாசர விழுமியங்கள் புதிய உத்வேகத்தைப் பெறுகின்றன.

இதற்கமைய எமது கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கலாசார விழாவும், "வாகை" சிறப்பு மலர் வெளியீடும் வெற்றிகரமாக நடந்தேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் இந்த நிகழ்வுகளோடு தொடர்புடைய அனைவருக்கும் இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

இறைபணியில்
சுவாமி அஜராத்மானந்தா
சுவாமி அஜராத்மானந்தா.

**SWAMI AJARATMANANDA**
***Swami - in Charge***
***RAMAKRISHNA MISSION***
***Ramakrishnapuram,***
***Batticaloa.***

12.11.2008

# பிரதேச செயலாளர் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

மனித சமுதாயம் பல்வேறுபட்ட கலாசார பின்னணியுடைய வாழ்வுகளுக்கூடாக தனது பயணத்தினை மேற்கொள்கின்றது. இக்காலப் பிரிவுகளுக்குள் இச் சமுதாயத்தின் மீது ஏற்படும் கலாசார அழுத்தங்களினால் அவை தமது அடையாளங்களை தானாகவோ அல்லது நிர்பந்தங்களின் மூலமாகவோ, இழப்பதற்கோ அல்லது புதுப்பித்துக் கொள்வதற்கோ உள்ளாகின்றது.

தனது இனம், மதம் மற்றும் மொழி என்பவற்றுடன் தனது பாரம்பரிய கலை, இலக்கிய, பண்பாடு என்பவற்றை நிலை நிறுத்த காலத்துடன் போராடவும் வேண்டியுள்ளது கண்கூடு. இவ்வகையிலான போராட்டங்கள், அவற்றின் இருப்பினை நிலை நிறுத்தி எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதற்கு ஏதுவாகின்றது. தற்போதைய சூழ்நிலையில் எமது பிரதேசத்திற்குரிய சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணி பாதுகாத்து அவற்றை எமது இளைய பரம்பரைக்கூடாக எடுத்து செல்லுதல் அவசியமாகும்.

வாகரைப் பிரதேசம் பல வரலாற்று சிறப்புடைய பல பிண்ணணிகளைக் கொண்டிருக்கும் ஒரு பிரதேசம், உதாரணமாக இலங்கையின் பூர்வீக குடிகளான வேடுவர் சமுதாயம் தற்போதும் இங்கு உள்ளது. மேலும் நடுகற்கள், பூர்வீக கட்டிட சிதைவுகள், கல்எழுத்துகள் என்பனவும் பரந்து காணப்படுகின்றன. இவை ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளன.

மிக நீண்ட காலத்தின் பின் வாகரைப் பிரதேசத்தின் கலாசார விழாவிற்கான இம் மலர் வெளியிடப்படுவதையிட்டு மனம் மகிழ்வதோடு எதிர்காலத்தில் இப் பிரதேசத்தின் தொன்மையினை வெளிப்படுத்தக் கூடிய ஆய்வுகள் செய்யப்பட வேண்டிய அவசியத்தையும் முன்வைக்கின்றேன்.

**சீ. கிரிதரன்**
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
வாகரை.

மட்டக்களப்பு மாவட்ட பதில் அரசாங்க அதிபர்

ஆர். கேதீஸ்வரன் வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

கோறளைப்பற்று வடக்கு 'வாகரை' பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படவிருக்கும் கலாசார விழாவினையொட்டி வெளியிட இருக்கும் 'வாகை' எனும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

வாகரைப் பிரதேசமானது இயற்கை அன்னையின் அனைத்து கொடைகளையும் இயற்கையாக தன்னகத்தே கொண்டமைந்த ஒரு பிரதேமாகும். கடல் வளமும், வனவளமும் இவையோடு வயல் வளமும் சேர்ந்து இப்பிரதேசம் செழித்தோங்க நலம் வழங்குகின்றது. இப்பிரதேசம் வாழ் மக்களின் கலை உணர்வையும் நெறிவளத்தையும் வெளிக்கொணரும் ஊடகமாக இவ்வாகரை 'வாகை' அமையும் என்பதில் ஐயமில்லை.

பின்தங்கிய பிரதேசமாக காணப்படினும் இவ்வூரின் கலை வளங்களையும் பாரம்பரியங்களையும் எடுத்தியம்புவனவாக அமையும் இக்கலாச்சார விழாவும் அதன்போது வரலாற்று சான்றாக வரையப்படுகின்ற வாகை மலரும் சிறப்புற எனது உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

**திருமதி. ஆர். கேதீஸ்வரன்,**
பதில் அரசாங்க அதிபர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

பண்பாட்டலுவல்கள், அமைச்சின் பணிப்பாளர்

## D.W.U. வெலிக்கள வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

மட் / கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகம் நடாத்துகின்ற கலாசார விழாவிலே வெளியிடும் “வாகை” எனும் மலருக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன்.

மிக நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இத்தகையதொரு கலாச்சார விழா வாகரைப் பிரதேசத்தில் நடைபெறுவது பாராட்டத்தக்கதொரு விடயமாகும்.

சங்க இலக்கியங்கள் நவிலும் ஐவகை நிலங்களுக்குள் நால்வகை நிலங்கள் ஒருங்கே அமையப்பெற்ற இப்பிரதேசத்தில் கரை கலாச்சார விழாக்களை நடாத்தி மறைந்து போகும் கலை கலாச்சார விழுமியங்களை மேம்படுத்தி இன்னலுற்ற மக்களுடைய மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது காலத்தின் தேவையும், அவசியமாகும்.

இவ்விழாவை ஒழுங்கமைத்து செயற்படுத்திய பிரதேச செயலாளர், கலாச்சார உத்தியோகத்தர், மற்றும் விழாக்குழுவினர் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு. இவ்விழாவில் வெளிவரும் மலர் சிறப்புடன் மிளிர எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


பணிப்பாளர்
**D.W.U. வெலிக்கள**
பண்பாட்டலுவல்கள், திணைக்களம்,
திருகோணமலை.

# ஆசிரியரின் உள்ளத்திலிருந்து

வாகரை பிரதேசமானது சிறந்த கலை மணம்மிக்க கிராமங்களை உள்ளடக்கிய பிரதேசமாகும். இப்பிரதேச மக்களின் கலை, இலக்கிய உணர்வுகளை வெளிக்கொண்டு வரும் முகமாக ''வாகை" எனும் நூல் வெளியிடப்படுகின்றது. வாகரைப் பிரதேசமானது பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கிய பிரதேசமாகும். சகல வளங்களையும் கொண்ட பிரதேசமாக காணப்பட்டாலும், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பின் தள்ளப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. இன்நிலையில் கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையினால் நடாத்தப்படுகின்ற கலாசார விழா அத்துடன் மலர் வெளியீடு என்பன வாகரை பிரதேசத்தின் வாழ்வியல் கலை, கலாசாரப் பண்புகளை ஏனைய பிரதேச மக்களும் அறியக் கூடியதாக இருப்பதுடன் சான்றுப்படுத்தல் ஆவணமாகவும், எதிர்கால சந்தயினருக்கு இப்பண்புகளை எடுத்தியம்பக் கூடிய ஆவணப்படுத்தலாகவும் கலாசார விழாவில் வெளியிடப்படும் வாகை மலர் காணப்படுகின்றது.

இம்மலர் வெளியீட்டிற்காக அனைத்து உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய எமது பிரதேச செயலாளர் மற்றும் உதவி பிரதேச செயலாளருக்கும் எனது நன்றிகளை தெரிவிப்பதுடன் இம்மலர் வெளியீட்டிற்காக ஆக்கங்களை வழங்கியவர்களுக்கும் நிதியுதவிகளை வழங்கியவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

**திரு. ப. சிவராம்**
கலாசார உத்தியோகத்தர்.



# கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவை

**01. தலைவர்** : திரு. எஸ். கிரிதரன் (பிரதேச செயலாளர்)

**02. உபதலைவர்** : செல்வி. ஆர். ராகுலநாயகி (உதவி பிரதேச செயலாளர்)

**03. பொருளாளர்** : திரு. சி. றூபாகரன் (கணக்காளர்)

**04. செயலாளர்** : திரு. ப. சிவராம் (கலாசார உத்தியோகத்தர்)

## குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| திரு. எஸ். ஆனந்தராசா | - | நிர்வாக உத்தியோகத்தர் |
| திரு. வை. உம்முனி | - | அண்ணாவியார், கொக்குவில் , கிரிமிச்சை |
| திரு. கா. இராசரத்தினம் | - | அண்ணாவியார், சின்னதட்டுமுனை, வாகரை |
| திரு. மு. காளிக்குட்டி | - | அண்ணாவியார், வட்டவான் மேற்கு |
| திரு.. க. செல்லத்தம்பி | - | அண்ணாவியார், பால்சேனை |
| செல்வி. ரெ. கலைவாணி | - | பிரதேச செயலகம், வாகரை |
| திரு. க. ஜக்கிணேஸ்வரன் | - | வாத்தியகலைஞர், புளியங்கன்றடி வாகரை |
| செல்வி. நா. சுபாஜினி | - | பிரதேச செயலகம், வாகரை |
| திரு. க. ரூபன் | - | கலைஞர், கதிரவெளி |
| திரு. செ. திருமுகம் | - | கலைஞர், பால்சேனை, கதிரவெளி |
| செல்வி. ஜீ. ஸ்ரீப்பிரியா | - | பிரதேச செயலகம், வாகரை |
| திரு. மு. நவரட்ணராஜா | - | அதிபர், வம்மிவட்டவான் வித்தியாலயம் |
| திரு. எஸ். துரைராஜா | - | ஆசிரியர், கதிரவெளி விக்னேஸ்வர வித்தியாலயம் |
| திரு. க. இளையதம்பி | - | அண்ணாவியார், கண்டலடி, வாகரை |
| திரு. எஸ். றோகணதாஸ் | - | நிகழ்ச்சி திட்ட உதவியாளர், பிரதேச செயலகம் வாகரை |
| திரு. எஸ். எஸ். கிங்ஸ்லி | - | முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம், வாகரை |

### மலர் ஆசிரியர்

திரு. ப. சிவராம் - கலாசார உத்தியோகத்தர்

### அட்டை ஓவியம்

திரு. எஸ். இராசரெத்தினம் - சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்

# உள்ளே.......


| | பக்கம் |
|---|---|
| 01. கதிரவன்னி அல்ல கதிர்வெளி | 01 |
| 02. வாகரையின் வரலாறு | 03 |
| 03. வடமோடியில் அமைந்த பதினைந்தாம் போர் நாட்டுக்கூத்து | 05 |
| 04. உபதேசத்தை விட சிறந்த முன்மாதிரியே மேலானது | 10 |
| 05. நூல்கள் + வாசிப்பு = பூரணத்துவம் | 12 |
| 06. தேசிய சொத்துக்களை பாதுகாப்பது எமது கடமையாகும் | 15 |
| 07. இயற்கை மருத்துவத்தில் அருமருந்தாகும் காய்கறி கிழங்கு வகைகளும், தானியங்களும் | 18 |
| 08. கலாசாரத்தின் மாற்றம் - சிறுகதை | 25 |
| 09. தேசமே என் அன்னை - கவிதை | 28 |
| 10. நகரமயமாக்கம் எமது சமூக கலாசார குடும்ப உறவுகளில் ஏற்படுத்திய தாக்கமும் மாற்றமும் | 29 |
| 11. கல்விச்சாலைகளே அறிவின் விளைநிலங்கள் - கவிதை | 33 |
| 12. கௌரவிக்கப்படும் கலைஞர்கள் | 34 |
| 13. பாடசாலை வரலாறு | 38 |
| 14. மருவி வரும் நாட்டார் பாடல்கள் | 43 |
| 15. கலாசார போட்டி முடிவுகள் | 50 |
| 16. நன்றியுரை | 52 |

# கதிரவன்னி அல்ல கதிர்வெளி

பொதுவாக ஊர்களின் பெயர்கள் பெரும்பாலும் காரணப் பெயராகவும், இடுகுறிப் பெயராகவும் அமைகின்றன. இவ்வாறே கதிரவெளி என்னும் பெயரும் இக்கிராமத்திற்கு ஏற்பட்டதாக அறிய முடிகின்றது.

இற்றைக்குச் சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் - இக்கிராமத்தை கதிரவன்னிமை என்னும் ஒரு நிலக்கிழார் ஆட்சி செய்து வந்தமையால் இக்கிராமம் கதிரவன்னி என்ற காரணப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வந்துள்ளது. 1850ம் ஆண்டளவில் இக்கிராமத்துக்கு ஆங்கிலேய மாவட்ட ஆட்சியாளர் ஒருவர் வருகை தந்தபோது கதிரவன்னிமையும், ஊர்மக்களும் சேர்ந்து நெற்கதிர்களை வயிலிருந்து வெட்டிக்கொண்டு வந்து அக்கதிர்களால் பந்தரிட்டு மாவட்ட ஆட்சியாளரையும் அவருடன் வந்த சகாக்களையும் வரவேற்றனர். இவ்வரவேற்பில் மனம் மகிழ்ந்த ஆங்கிலேயத்துரை இக்கிராமம் கதிரவன்னி அல்ல கதிர்வெளி என இன்றுமுதல் அழைக்கப்படும் என்று அறிவித்து மீண்டார். அதன் பின் கதிர்வெளி என்னும் பெயர் மருவி கதிரவெளி என்றாயிற்று என்று இவ்வூரில் வாழ்ந்த முதியோர்களின் மூலம் அறிய முடிகின்றது. இவ்வரலாறு 90 வீதம் உண்மையாயிருக்கலாமென நம்ப இடமுண்டு.

இவ்வாறு காரணப்பெயர் பெற்றாலும் பெயருக்கேற்ப இக்கிராமம் ஒரு விவசாயக் கிராமமாகத் திகழ்கின்றது. கிழக்கே இந்து மகா சமுத்திரமும், மேற்கே ஏறக்குறைய 5000 ஏக்கருக்கு மேற்பட்ட வனப்பிரதேசத்தையும் உள்ளடக்கியது. அவ்வனப்பிரதேசத்தை இவ்வூர் மக்கள் தம் முயற்சியால் வளமுள்ள பிரதேசமாக மாற்றி ஏறக்குறைய 2000 ஏக்கரளவு காணியை நெற்செய்கைக்கும் மேட்டுப்பயிர் செய்கைக்கும் உட்படுத்தியுள்ளனர்.

அதேவேளை கால்நடை வளர்ப்பிலும் இவ்வூர் பிரசித்தி பெற்றுள்ளது. தற்போது இங்கு சுமார் 2000 எண்ணிக்கையிலான எருமை இன மாடுகளும், 5000 எண்ணிக்கையிலான பசுவின மாடுகளும், 1000 எண்ணிக்கையிலான வெள்ளாடுகளும் இருக்கின்றன. கடந்த 2006ல் ஏற்பட்ட கலவரத்தின்போது இக்கால்நடைகள் 20 வீதம் அழிந்துவிட்டன. எனினும் அரசு, அரசுசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இது மீள்நிரப்பு செய்யப்பட்டள்ளன. அதேவேளை பால் சேகரிக்கும் நிலையம் ஒன்றும் இங்கு அமைந்திருத்தல் சிறப்பானதாகும்.

2004ம் ஆண்டு மார்கழியில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது அழிக்கப்பட்ட சுமார் 275 வீடுகளுடன், யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 180 வீடுகளுடன் மொத்தம் 455 - வீடுகள் இங்கு அரச அனுசரணையுடன் கட்டி முடிக்கப்பட்டதோடு, இக்கிராமத்திற்கு மின்சார வசதியும் செய்து கொடுக்கப்பட்டதினால் இக்கிராமத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

மேலும், இக்கிராமத்தின் கலாச்சாரப் பாரம்பரியங்களும் தனித்தன்மையானவை. மரண வீடுகளிலும், விவாக வீடுகளிலும் வரிசைமுறை செய்தல் என்பது ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு விதமாக இடம் பெறுதல் பண்டு தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையாகும்.

கலைத்துறையிலும் இக்கிராமம் முன்னணியில் திகழ்கின்றது. வடமோடி நாட்டுக்கூத்து என்பது இக்கிராம மக்களால் அழியவிடாது வளர்க்கப்பட்டு வந்துள்ளதோடு இன்றும் அவை போதிக்கப்பட்டே வருகின்றது. கோயில் விழா, பாடசாலை விழா ஆகியவற்றில் நாட்டுக்கூத்து அங்கமாக நடாத்தப்படுகின்றது.

அத்தோடு இக்கிராமத்திற்கே தனியுரித்தானது கோலாட்டம் என்றும் பாரம்பரிய நிகழ்வாகும். அதுவும் முக்கிய நிகழ்வுகளின்போது ஒரு சிறப்பம்சமாக இடம் பெறுகின்றன.

இவ்வாறு சிறப்புகள் பல பெற்ற இக்கிராமத்தில் தொல்பொருட் சிதைவுகளும் பல காணப்படுகின்றன. முக்கியமாக படிவெட்டியமலை, குரங்கு கொடிபோட்டமலை, மடமடத்தான்வெம்பு, பதினாறு கற்றூண்கள், கற்பட்டி மலைக்கிணறு, என்பன குறிப்பிடத்தக்கவை. இதன் மூலம் ஆதியில் இங்கு ஒரு இராசதானியுடனான சமூகக் கட்டமைப்பு ஒன்று வாழ்ந்து அழிந்துள்ளமையை அறிய முடிகின்றது.

தற்சமயம் இவ்வூர் மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பனவற்றுடன் மீன்பிடி தொழிலிலும் ஈடுபட்டு வருகின்றனர். சிறுவர்கள் கல்வி கேள்விகளிலும், ஆலய அனுஷ்டானங்களிலும் மிகவும் ஈடுபாடு கொண்டு செயல்படுகின்றனர்.

எனவே, சிறப்பானதொரு எதிர்கால சமூகம் இக்கிராமத்தில் உருவாகி வருகின்றமையால் இக்கிராமம் ஒரு சிறப்பு வாய்ந்த கிராமமாக ஒளிரும் நாள் வெகு தொலைவில் இல்லையென்பதை உறுதியாகக் கூறலாம்.

**ஆக்கம்: குழ. சிங்காரவேல்**
ஒய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்,
கதிரவெளி.

# வாகரையின் வரலாறு

இயற்கை எழில் கொஞ்சும் எம் தாய் நாடாம் இலங்கை தன்னகத்தே ஒன்பது மாகாணங்களைக் கொண்டுள்ளது. இம்மாகாணங்களில் கிழக்கு மாகாணம் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இதில் மீன்பாடும் தேனாடு என்று அழைக்கப்படுகின்ற மட்டக்களப்பு மிகவும் அழகு வாய்ந்ததாகவும், சிறப்பு மிக்கதாகவும் காணப்படுகிறது.

இம்மாவட்டம் ஆரம்பத்தில் சிங்கள மன்னராட்சிக்கு உட்பட்டிருந்ததென்றும், இவ்வாறு இருந்த வேளையில் குறுநில மன்னர்கள் சிலர் இம்மண்ணில் சுதந்திரமாக ஆட்சி செய்ததாகவும் அறியக்கிடைக்கிறது. மட்டக்களப்பு மான்மியம் மட்டக்களப்புத் தமிழகத்தின் வரலாற்றினை சுருக்கியும், விரித்தும் சொல்கிறது. எனினும் உண்மைச் சம்பங்களோடு, கற்பனையும் கலந்துள்ளதாக ஓர் விமர்சனமும் உண்டு.

'வெற்றி' எனும் பொருள் தரும் வாகை விருட்சங்கள் நிறைந்த வாகரை ஊர் மட்டக்களப்பு தமிழகத்தின் வரலாற்றில் தனக்கென ஓர் இடத்தோடு விளங்குகிறது. இது பழந்தமிழ் மக்களில் இருக்கை ஆகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபால் 60km தூரத்தில் அமைந்துள்ள இவ்வூர் ஏறக்குறைய 500 சதுர கிலோமீற்றர் பரப்பளவை உடையது. இது ஒரு நெய்தல் பூமி என்பதை அதன் 75 சதவீத கடல் வளம் எடுத்துக்காட்டும். மூன்று பக்கமும் நீரினால் சூழப்பட்ட இக்கிராமம் வளமும், அழகும் மிக்கதாகும்.

இவ்வூரை சிறப்பாக 'வந்தோரை வாழவைக்கும் வாகரை' என்றும் இவ்வூர் மக்கள் சிறப்பாக அழைப்பதுண்டு. வாகரை எனும் பெயர் அங்கு நன்கு செழித்து வளரும் 'வாகை' எனும் மரத்தின் அடியாகத் தோன்றிய காரணப்பெயரெனவும், ஒருவரை வா கரைக்கு என்று அழைப்பதினால் வாகரை ஆனது எனவும், கடல் அலைகள் துள்ளிப் பாய்ந்து கரையைச் சேர்வதனால் வாவு பாய்கின்ற கரை, வாகரை ஆனதென கூறுவார்கள். ஆரம்பத்தில் 'உவாகரை' என்று அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. 'உவா' என்னும் சொல் கடலினையும், ஒரு வகை மரத்தையும் குறித்து நிற்பதாகவும் இதன்படி உவாகரை என்பது கடற்கரையை அல்லது உவாறி என்னும் மரங்கள் செறிந்த இடத்தை குறிப்பதாகவும் கொள்ளலாம்.

இப்பிரதேசத்தில் ஆரம்பத்தில் வேடுவ குலத்தவர் வாழ்ந்ததாக அறியப்பட்டுள்ளது. தற்போது வாகரையில் இந்துமதம் 87 விகிதமாகவும், 13

வீதமாகவும் றோமன் கத்தோலிக்கம் பின்பற்றப்படுகிறது. இப்பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் ரோமன்கத்தோலிக்கராவர். 1899ம் ஆண்டு தைமாதம் 15ம் திகதி வெள்ளையடி மடு கிராமத்தில் பாடசாலை ஒன்றினை ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து 1947ம் ஆண்டு அமரர் பேதுருப்பிள்ளை உடையார் அவர்கள் தமது சொந்தக் காணியில் கல்லினால் ஒரு பாடசாலை கட்டி தன் தலைமையின் கீழ் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இன்று இது மட்/வாகரை மகா வித்தியாலயமாக அரசாங்கத்திடம் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. மட் / வாகரை மகா வித்தியாலயம் பல வகையிலும் வளர்ச்சியின் படிகளை எட்டிப் பிடித்து வந்தது.

வாகரைப் பிரதேசத்தில் 1990ல் ஏற்பட்ட உள்நாட்டுப் போர் இந்த ஊர் மக்களை அகதிகளாக பல இடங்களுக்கும் புலம் பெயர வைத்தது. இதனால் வாகரைக் கிராமம் அழிவுக்குள்ளாகி இருந்தது. இதனைத் தொடர்ந்து 2004ல் ஏற்பட்ட ஆழிப்பேரலை, போர் என்பனவற்றால் இக்கிராமம் தனது சிறப்பை பெரிதும் இழக்கலாயிற்று. எனினும் இக்கிராமம் மீண்டும் எழும் புதிய வரலாறு எழுதும் என்ற நம்பிக்கை மக்கள் அனைவருக்கும் உண்டு.

சி. யசிதா
தரம் - 12
மட் / வாகரை ம.வி



# வடமோடியில் அமைந்த பதினைந்தாம் போர் நாட்டுக்கூத்து

எமது பாரம்பரிய கலைவடிவங்களில் இன்றும் கூட நிலைத்து நிற்கும் ஒரு தேசிய தமிழ் கலைவடிவமாக விளங்குவது கூத்துக் கலையாகும். இக் கூத்தானது ஆரம்ப காலத்தில் சடங்கு நிலைப்பட்டதாக இருந்து பின்னர் இது நாடக வடிவமான கூத்துக்கலையாக பரிமாணம் பெறுகின்றது. இறை நம்பிக்கையை அடிநாதமாகக் கொண்டு உருவாக்கம் பெற்ற இச் சடங்குகள் சமூதாய மாற்றப் போக்குகளுக்கு இசைந்து கலை வடிவமாக உருப்பெறுவதை அவதானிக்க முடியும். இந்த வகையில் இக் கூத்துக்கள் மட்டக்களப்பு தமிழரிடையே பண்டு தொட்டு வழங்கி வருகின்றன.

மட்டக்களப்பு தமிழரிடையே ஆடப்படும் கூத்துக்களிடையே பாடல் வகைகள், கதைப்பொருள், கதைப்போக்கு, கூத்து நிகழ்த்தப்படும் முறைமை என்பவற்றுக்கிடையே ஒருமைப்பாடு உண்டு. எனினும் பிரதேச வேறுபாடுகளுக்கு அமைவாக அவ்அவ் பிரதேசங்களின் தனித்துவங்களை இக் கூத்துக்கள் உள்வாங்கி நிற்கின்றன. மட்டக்களப்பு என்றதும் கலை தொடர்பான ஆர்வமுள்ளவர்களுக்கு அங்குள்ள நாட்டுக் கூத்தும் நாட்டார் பாடல்களுமே வந்து நிற்கும். இக்கலை வடிவங்கள் மட்டக்களப்பு மண்ணுக்கு உரிய தனித்தன்மைகளையும் சிறப்புக்களையும் கொண்டவையாக உள்ளன.

இவ்வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசமானது வடமோடி கூத்துக்களுக்கு பேர்போன இடமாகவுள்ளது. இங்குள்ள நாட்டுக் கூத்து அண்ணாவியாரான காத்தான் இராசரத்தினம் என்பவரால் பதினைந்தாம் போர் தொடர்பான நாட்டுக் கூத்து வடிவத்தினை இவ்வாறு கூறுகின்றார். இதில் முதலாவது பாத்திரமாக கட்டியக்காரன் விருத்தம் முடிவடைந்த பிறகு தாளக்கட்டு "செகிணம் செகிணம் தையத்தாம்" அதன் பின்பு பாட்டு இவ்வாறு அமைகின்றது. வந்தான் கட்டியக்காரன் சபையைனாடி வாறான் கட்டியக்காரன் பகைவர்கள் வழக்கு அஞ்சி ஓடவே நல்ல பதியாளும் மகாராசன் வருகிறார்.

அதன் பின்பு வசனம்

ராசாத ராசன் ராசமார்த்தாண்டன் ராச ஒய்யாரன் துரியோதன மகாராசனும் தம்பிமாரும், கண்ணன், சகுனி பதினைந்தாம் நாள் யுத்தம் செய்ய வருகிறார்கள் நான் தெருவீதியில் போகின்றேன் ஒருவரும் பேசக் கூடாது.

**துரியோதனன் வரவு விருத்தம்.**

மூவுலகில் எல்லோருக்கும் புகழ் பெற்ற மன்னன் புத்திரிலோதராசன் நாவுலகில் நான்மறை சொல்லும் தேவர்க்கும் முனிவருக்கும் அடங்காத தீரன்.

**துரியோதனன் பாட்டு**

அஸ்த்தனா புரிதன்னில் ஆண்டிடும் மகாராசன் அரவக் கொடி தரித்த அரசனாகிய தீரன்.

கண்ணன் சகுனி கூட கதித்திடும் சேனை சூழ மன்னன் துரோணச்சாரி மைந்தன் அஸ்மத்தாமா வர.

**சகுனி :-**

கொன்று விட்டான் என்று சொல்லி கோபித்து பேச வேண்டாம் கொன்றவனை கொல்லா விட்டால் நல்லதில்லை மருமகனே.

**கண்ணன்:-**

பதினைந்தாம் நாள் யுத்தத்தில் பார்த்தன் படவே போறான்.

**துட்சாதனன் :-**

பாருலகில் ஆளவென்று பண்புடனே பேசுகிறார் பாரளந்தோன் ஆலே ஐவர் பாருலக ஆளுகிறார்.

**அஸ்மத்தாமா:-**

வெல்லுகிறேன் என்று சொல்லி விசனப்படவே வேண்டாம் மன்னா மிக்கதோர் ஐவர்களை விரைவினிலே கொன்று வாறேன்.

**சல்லிதன்:-**

மாநிலத்தில் கீர்த்தி பெற்ற மன்னா நீ அஞ்ச வேண்டாம் மத்திய தேசத்தரசன் வல்லமையைப் பாரும் இப்போ

**கண்ணன்:-**

கேளும் மாமா எனது நாகபாசத்தால் அருட்சுனனை கொல்லுவேன் மாமா.

**துரோணர்:-**

குண்டளம் காதிலாட குருவென்று எவரும் போற்ற விண்டளம் அசன்ற போற்ற வில்லும் கரந்திலேந்தி மண்டலம் புகழவேதான் மணிமுடி சிரசில் மின்ன தாண்டிய துரியோதனன் தன்னைக்காண தலகத்தன் வருகின்றாரே.

**துரோணர்:-**

துரோணர் வந்தார் சபையை நாடி துரோணர் வந்தார் நூற்றொரு பேரிலே நூதனமாகவே பார்த்தனுக்கு பல வித்தைகள் கற்றுத் கொடுத்திடும்.

கரத்தில் வில்லம்பு கடுகி எடுத்துக் கொண்டு எதிர்த்து வந்தோரை எமலோகம் சேர்ப்பேனென்று.

**துரோணர்:-**

கேளும் துரியோதன மகாராசனே என்னை அழைத்த காரியம் நான் அறியும் படி சொல்லும் துரியோதன மகாராசனே.

**துரோணர்:**

சற்பக் கொடி தரித்த ராசனே நீ போக தனஞ்செயன் தன்னைக் கொல்ல நீ உரைத்தாய் உற்றதோர் வித்தைகள் கற்பித்த குருவென்று உணர்ந்தவன் பாராமல் எந்தனொடு விற்குருவை கொல்ல விசயனும் சமர் செய்தான். வேந்தனே நீ அறியாயோ தற்பரனை தவம் செய்யும் வேளையில் வில்லால் அடித்த விசயன் என்று அறியாயோ.

15நாள் போர் போவதற்கு துரோணர் தன் மனைவியாகிய மாங்கிலியம் தன்னிடத்தில் நான் இன்று போர் செய்ய போகின்றேன். பக்குவமாக அரண்மனையில் இருப்பாயாக என்று கூறினார். அது கேட்டு தன் மனைவி போகாமல் என்னுடன் இருப்பாயாக என்று தடுத்தார். அது கேட்டு துரோணர் நான் போகாமல் இருந்தால் அரசர்கள் என்னை நிந்திப்பார்கள். மனைவி நானும் கூட வந்து விடுவேன் என்று கூற துரோணர் உடனே தடுக்காதே என்னை நான் 15நாள் வரைக்கும் போர் செய்து வந்தேன். இன்று நான் இறக்க வேண்டிய நாளாய் இருக்கின்ற படியால் நான் போர் செய்தே தீருவேன் என்று துரோணர் கூறினார். அன்று 15ம் நாளில் கடும் போர் நடைபெற்றது. ஐவர் பஞ்சபாண்டவர்கள் பக்கத்தில் திட்டத்தீமன் சேனாதிபதியாக பாண்டவர் பக்கத்தில் நின்று போர் புரிந்தான்.


துரோணரை வெல்ல முடியாமல் கடும் கஷ்டப்பட்டு நிற்கின்ற நேரத்தில் மாயவன் பரமாத்மா ஆன மாயவன் தருமரை பார்த்து நீ ஒரு பொய் சொல்ல வேண்டும் என்று கூறினார். அது கேட்டு தருமர் வியப்புற்று நான் ஒரு நாளும் பொய் சொல்ல மாட்டேன் என்று பிடிவாதமாக உரைத்தார் மகா விஸ்ணுமூர்த்தி உடனே சொன்னார் நீ பொய் சொல்லாட்டி பாரத போர் முடியாது. பிறகு வெல்லவும் முடியாது என்றார். உடன் தருமர் சம்மதித்தார் எப்படி பொய் சொல்ல வேண்டும் என்று பகவானிடம் தருமர் கேட்டார். அதற்கு பகவான் என் மகன் அசவத்தாமா இறந்தான் என்று சொன்னால் நான் உடனே வில்லை போட்டு விட்டு நிராயுதனாக நிற்பேன் என்று துரோணர் என்னிடம் கூறி இருக்கிறார். தருமர் அதற்கு சம்மதித்து போர் முகத்தில் போய் நின்று தருமர் சொல்லத் தொடங்கினார். "எல்லா சனங்களும் கேளுங்கள் அசுபத்தாமா இறந்து விட்டான்." என்று தருமர் கூறினார். உடனே சனங்கள் கேட்டார்கள் அசுவத்தாமா இறந்தது உண்மைதானா என்று கேட்டார்கள் அதற்கு தருமர் ஆம் என்று சொல்ல "யாதுகுஞ்சரம்" என்ற அசுவம் தான் இறந்தது என்று தருமர் சொன்னார். துரோணர் வில்லை போட்டுவிட்டு தேரில் உட்காந்து இருந்தார். உடனே திட்டத்தமன் தன் ஜென்ம பகைவனான துரோணரை கொல்லும் தருணம் வந்து விட்டது என்று நினைத்து உடனே கத்தி எடுத்துக் கொண்டு தேரின் மேல் பாய்ந்து துரோணரை வெட்டி தள்ளி விட்டான். துரோணர் உடனே இறந்து கிடந்தார்.

அர்ச்சுணனின் ஆசிரியர் துரோணர் என்ற படியால் அவன் கவலை உற்று மனம் வருந்தி ரணக்களத்தில் நிற்காமல் விலகி விட்டான். துரோணரின் மனைவி, மகன் அசுவத்தாமா துரோணர் இறந்து கிடந்த இடத்திற்கு வந்து அழுது கொண்டு அவருடைய ஈமைக் கிரியையை செய்து முடித்து விட்டு உடனே ஐவர் பஞ்சபாண்டவரை கொல்லப் போறேன் என்று சபதம் செய்தான். அசுவத்தாமா வரப் பிரசாலியானபடியால் அவனுக்கு பயந்து பகவானிடம் போய் முறையிட்டார்கள். உடனே மகா விஷ்ணுமூர்த்தி பயப்பட வேண்டாம் பஞ்ச பாண்டவர்களே அவன் நாராயன அஸ்திரம் பிரயோகம் செய்ய போகின்றான். ஆயுதம் முழுவதையும் கீழே போட்டுவிட்டு நிராயுதபாணியாக நின்றால் அந்த அஸ்திரம் திரும்பிப் போய் விடும் அது கேட்டு எல்லோரும் ஆயுதங்களை போட்டுவிட்டு நின்றார்கள். வீமன் மட்டும் ஆயுதம் போடாமல் நின்றான். அது கண்டு அருச்சுணன் வீமனுடைய ஆயுதத்தை விரைந்து சென்று பறித்துப் போட்டு விட்டான். அசுவத்தாமா விட்ட அஸ்திரம் வந்து பார்த்த போது பகையாளி இல்லை என்று திரும்பி போய் விட்டது. அஸ்திரம் போன பிறகு எல்லோரும் தங்கள் ஆயுதம் முழுவதையும் கையில் எடுத்துக் கொண்டு போர் புரிந்தார்கள்.

அன்று 15ம் போரில் துரோணர் இறந்து விட்ட படியால் துரியோணர் பக்கத்தில் சேனாதிபதி இல்லாதபடியால் போரை நிறுத்தி விட்டு நாளை போர் தொடங்கும் என்று கூறிவிட்டு தம் தம் பாசறைக்கு சென்று வழக்கப்படி அவர்களுடைய கீதங்களை இசைத்து மகிழ்ந்து இருந்தார்கள் என்று மகாபாரதத்தில் வேதவியாசர் என்றும் முனிவர் அருளி இருக்கின்றார்"என்கிறது மகாபாரதம்."

இதனை அடியொற்றியே காத்தான் இராசரத்தினம் என்பவரால் 15ம் நாள் போர் நாட்டுக் கூத்தாக இயற்றப்பட்டு, ஆடப்பட்டு வருகின்றது. இந் நாட்டுக் கூத்துக் கலை வாகரைப் பகுதியில் பல இன்னல்களைச் சந்தித்து, தமது வாழ்க்கையாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் மென்மேலும் மெருகேற்றப்பட வேண்டியதுடன், அதனை அழியாமல் எதிர்கால சந்ததிக்கும் காத்துக் கொடுப்பது இன்மண்ணிற் பிறந்தோர் கடமையாகும்.

**ப. சிவராம்.** B.A, P.G.D.E, H.N.D.A
கலாசார உத்தியோத்தர்.



# உபதேசத்தை விட சிறந்த முன்மாதிரியே மேலானது



இன்றைய வாழ்க்கைப் பயணத்தில் உபதேசம் என்பது எல்லோர்க்கும் கைவந்த கலையாக உள்ளது. ஊருக்குத்தான் உபதேசம் தனக்கல்ல என்பது போல் இவ்வுலகில் வாழ்ந்து மடியும் அற்ப மனிதர்களுக்கு மத்தியில் தன் வாழ்க்கையையே மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய பல மாமனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். தன் வாழ்நாள் முழுவதும் மக்களுக்கு சேவை செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து காட்டிய அன்பு அன்னை திரேசாவை நினைவு கூர்தல் பொருத்தமான ஒன்றாகும். அதேபோல் விடாமுயற்சி, தன்னம்பிக்கை என்பவற்றை உபதேசிப்பதோடு அல்லாமல் தன் வாழ்வில் கடைப்பிடித்தும் வாழ்ந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனையும் மறக்க முடியாது.



மேலும் வாய்ச்சொல்லில் வீரர்களாகத் திகழும் சிலர் உபதேசத்திற்கு மாறாக வாழ்வில் வாழ்கின்றார்கள். போதைவஸ்தை ஒழிப்போம் என மேடையில் முழங்கி விட்டு தன் சொந்த வாழ்க்கையில் அடிமையாகியுள்ளனர். இவர்களை எம் மத்தியில் இனங் காணலாம். இவர்களை முன் மாதிரியாக கர்த்தாக்களாகக் கொள்லலாமா? பெற்றோர் - ஆசிரியர்கள் நல்வழிப் படுத்துகையே சிறந்த எதிர்காலச் சமுதாயத்திற்கு வித்திடும். இதனை பின்பற்றி பெரியோர்கள் தம் வாழ்க்கை மிகுந்த ஒழுக்கமுடன் நடத்திச் செல்வார்கள் எனின் உபதேசத்திற்கு அவசியம் இல்லாமல் போய் விடும். இத்தனை முன்மாதிரியே போதுமானதாக அமையும்.


இதே போல் சிறு குழந்தைகள் மத்தியில் முன் மாதிரியாகத் திகழும் மகாகவி பாரதியையும் மறக்க முடியாது. அச்சத்தை ஒளிப்போம். என போதித்த அவர் தன் வாழ்விலும் வாழ்ந்து காட்டினார். அது போல் வன் முறையற்ற போராட்டம்

என மகாத்மா காந்தி அடிகளார் உபதேசித்தார். தன் சொந்த வாழ்க்கையில் அகிம்சைவழியில் நின்று போராடிய நன்னெரியாளர். அது போல் உண்மையைத் தனது வாக்காகக் இராமகிருஸ்ணர் வாழ்ந்து காட்டினார். எம் வாழ்வில் முன் மாதிரியாக அமைதல் வேண்டும். இவர்களை முன்னுதாரணமாகக் கொள்ளல் நன்று.



நம் வாழ்க்கையில் ஒழுக்கமான விழுமியங்களைப் போதிக்கும் போது நம் வாழ்க்கையில் அவ் விழுமியங்கள் உண்டா? என சிந்தித்து போதிக்க வேண்டும். அப்போது தான் அவர்களை ஒழுக்கமான நிலைக்கு கொண்டு செல்லும். மற்றவர் பிழையைச் சுட்டாமல் தன் பிழையைச் சிந்தித்துச் செயல்பட வேண்டும். வாய் சொல்லில் தமது திறன்களைக் காட்டாமல் செயலில் காட்டும் மற்றவர்கள் பாராட்டும் வண்ணம் வாழ்ந்து காட்டுவோம். உன்னையே நீ அறிவாய் என்பதற்கிணங்க தொடர்கள் நடத்துவோமாயின் மற்றவர்கள் பாராட்டும் வண்ணம் முன்னேறிக் காட்டுவோம். சிறந்த முன் மாதிரிகளாக உள்ள மகான்களை கடைப்பிடித்து வாழ்வோமாயின் வாழ்க்கையில் வெற்றியை அடையும் நிலைமையை நாம் அமைப்போம். வாழ்வோம் வாழ்ந்து காட்டுவோம்.

**செல்வி :- மதிபாலசிங்கம் கிருஸ்ணவேணி**
மட்/பனிச்சங்கேணி திருமகள் வித்தியாலயம்
கனிஷ்ட பிரிவில் 1ம் இடம் பெற்ற கட்டுரை
தரம் - 09




# நூல்கள் + வாசிப்பு = பூரணத்துவம்




இன்றைய உலகில் மனித வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள் மிகவேகமாக மாறிவருகின்றன. இயந்திரமயமாகிப் போன உலகில் மனிதனும் இயந்திரம் போல இயங்கிங் கொண்டே இருக்கிறான். எப்போதாவது கிடைக்கும் சிறு ஓய்வையும் இலத்திரனியல் ஊடகங்கள் விழுங்கிக் கொள்கின்றன. இவ்வாறான சிக்கல்களால் வாசிப்புப் பழக்கம் மனிதனை விட்டு விலகிக் கொண்டே போகிறது. இந்நிலை எவ்வளவு வேகத்தில் போகிறதோ? அவ்வளவு வேகத்தில் நம்மை அறியாமை மூடிக் கொள்ளும். இதை விரட்டியடித்து அறிவு பெற்ற சமுகமாக நாம் மாறுவதற்கு ஒரு இலகுவான வழி இருக்கிறது, அதுதான் வாசிப்பு. இதன் மகத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளத் தவறுகிறோம். ஆனால் 15ம் நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த நமது முன்னோர்கள் தெரிந்து கொண்டனர்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு"

என்று எமது முன்னோர்களில் ஒருவரான வள்ளுவப் பெருந்தகை சொல்லி வைத்தார். ஏன் சொன்னார்? நூல்களை வாசிப்பதன் மூலம் பற்பல அனுபவங்களையும், மேலான அறிவையும், பெற்றிட முடியும். இதனைக் கொண்டு நாம் வாழ்வில் பிரகாசிக்க முடியும். வாசிப்பதற்கு நாம் செலவிடும் ஒவ்வொரு மணித்துளியும். அறிவைப் பெருக்கிக் கொண்டு சமுகத்தில் உயர்வடைவதற்கான உந்து சக்தியாகவே அமையும்.





"வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கின்றது" என்று அறிஞர் பேக்கன் சொல்லி வைத்தார். அவரது கூற்றுக்கு அமைவாக நாம் ஓய்வு நேரத்தை புத்தகங்கள் வாசிப்பதில் செலவிட வேண்டும். நாம் இளமை முதல் நூல்கள் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாளடைவில் அறிவும், பண்பும், ஆற்றலும் மிக்கோராக வாழ்வதற்கு அது வழிகாட்டும். "வையத்துள் வாழ்வாங்கு வாழும்" நெறியினை அறிந்திட முடியும். இதனாலேதான் "நூல் பல கல்" என்றார் ஔவையார்.



புதிய புதிய தகவல்களைத் தந்து நமது அறிவை விசாலப்படுத்துவது நூல்கள் மட்டுமல்ல, பத்திரிகைகள், சஞ்சிகைகள், விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள், கட்டுரைகள் எனப்பல உள்ளன. நமக்குக்கிடைக்கும் ஓய்வு நேரத்தையெல்லாம் இவற்றை வாசிப்பதில் செலவு செய்து நம்மை நாம் முழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும். கண்டது கற்கப் பண்டிதன் ஆவான் என்பதும் நமது முன்னோர் வாக்குத்தான். இதனை வேதவாக்காகக் கொண்டு வாசிப்பதில் ஈடுபடுவோம்.



இன்று, தமது காசுப்பைகளை நிறைத்துக் கொள்ளும் முயற்சியில் சில சஞ்சிகைகள் ஆபாசப் படங்களைத் தாங்கியும், பாலியல் உணர்வுகளை தூண்டி விடக் கூடிய கட்டுரைகளையும் தாங்கிக் கொண்டு வெளிவருகின்ற அவல நிலை உண்டு. நம்மைக் சீரழிக்கும் நூல்களையோ, சஞ்சிகைகளையோ வாசிக்காமல், நமது அறிவை நல்ல முறையில் வளர்த்துச் செல்லக் கூடிய பயன்மிக்க புத்தகங்களையே வாசிக்க வேண்டும். வாசிப்பினால் பல திறன்களை வளர்த்துக் கொள்கிறோம், தனிமை உணர்வை நம்மிலிருந்து விரட்டியடிக்கிறோம். பொறுமை, நிதானம், அவதானம், அமைதி, எனப் பல நடத்தை மாற்றங்கள் ஏற்படுகின்றன. அத்துடன் மொழியாற்றல்



விருத்தியடைகிறது. கிரகிக்கும் · தன்மை அதிகரிக்கிறது. ஞாபகசக்தி அதிகரிக்கின்றது. எனவே வாசிப்பு அறிவைப் பெருக்குவதுடன் நின்றுவிடாது நமது திறன்களையும் வளரச் செய்து, மனப்பாங்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தி பூரண ஆளுமை மிக்க ஒரு பிரஜையாக மாற்றி அமைக்கிறது. இதனாலே தான் ருஸ்கின் என்ற ஆங்கில அறிஞன் "புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் ஏதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது." என வாசிப்பின் உயர்வைக் காட்டுகிறார்.

எனவே நாம் ஒவ்வொருவரும் நமது பொழுது போக்காக வாசிப்பதை மேற் கொள்ளுதல் வேண்டும், அத்துடன் நமது வீடுகளிலுள்ள சிறார்களையும் வாசிப்பதில் ஊக்கப்படுத்த வேண்டும். நமதும், நம் சிறார்களினதும் பிரகாசமான, அறிவு நிறைந்த எதிர்காலத்திற்கான அத்திவாரத்தை இன்றே தொடங்குவோம்.

எஸ். சிங்காரவேல் B.A (Hons) ஆசிரியர்
மட்/வாகரை ம.வி.



# தேசிய சொத்துக்களை பாதுகாப்பது எமது கடமையாகும்.

காலம் மிக வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அதன் வேகத்துக்கு ஈடு கொடுக்கும் வகையில் இன்றைய உலகம் நவீன மயப்படுத்தப்பட்டுள்ள இன்றைய காலகட்டத்தில் தேசிய பொதுச் சொத்துக்கள் அளப் பெரிய அளவில் வளர்ந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் நாம் பொதுச் சொத்துக்களை பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். இவ் பொதுச் சொத்துக்கள் என்றால் என்ன? அதனை பாதுகாக்கும் வழிமுறைகளை பின்வருமாறு சுட்டிக் காட்ட முனையலாம்.




மேலும் எமது நாட்டில் அரசினால் வழங்கப்படும் சொத்துக்களே! பொதுச் சொத்துக்களாகும். அதனை நாம் இன, மத, வர்க்க வேறுபாடு அல்லாது பயன்படுத்துவதன் மூலம் அதனைப் பாதுகாக்க வேண்டும். மக்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற பொதுச் சொத்துக்களாவென வைத்தியசாலை, வாகனங்கள், பூங்காக்கள், பாடசாலை கட்டிடங்கள், தளபாடங்கள், நீர்க்குழாய்கள், போன்றன பொதுச் சொத்துக்களாக கருதுகின்றனர். இவ் பொதுச் சொத்துக்களை பாதுகாப்பது அன்நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜைகளினதும் தலையாய கடமையாகும்.



பொதுச் சொத்துக்களில் வாகனத்தை எடுத்துக் கொண்டால் மக்கள் தமது அன்றாட கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வாகனம் அவசியமாகும். அதனை சிலர் சீரழித்துக் கொண்டே இருக்கிறார்கள். உதாரணமாக புகை வண்டியில் ஆசனங்களின் சில பகுதிகளில் அநாவசிய விடயங்களை எழுதியும் அதனை கிழித்தும் விடுகின்றார்கள்.

பின் விளக்கின் சில பகுதிகள் தொங்கிக் கிடக்கின்றன. இதனால் மக்கள் பிரயாணம் செய்வது பெரிதும் அவலமாக உள்ளது. அடுத்து சந்தைகளையும், அதில் வேலை செய்பவர்களையும் பாதுகாக்க வேண்டும்.

அடுத்து பூங்கா வனத்தை எடுத்துக் கொண்டால் உதாரணமாக எமது நாட்டில் உள்ள "பேராதனைப் பூங்கா" என்று கூறுவது இவ்விடத்தில் நோக்கத்தக்கது. பூங்காவனத்தில் உள்ள பூக்களை கொய்தல், அதனை பிசைந்து போடுதல், பூக்களை கொய்து எறிதல் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் பொதுச் சொத்துக்கள் பாதிப்படைகின்றன. அடுத்து பாடசாலையை எடுத்துக் கொண்டால், பாடசாலை கட்டிடங்கள், தளபாடங்கள், என்பவற்றை உடைத்தெறிதல், சுவரோவியங்களில் துளையிடல் கீறுதல், அநாவிசயமான விடயங்களை எழுதுதல் போன்ற விடயங்களினால் பொதுச் சொத்துக்கள் பாதிப்படைகின்றன. இதனை எம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி இதனை தடுத்து நிறுத்த முடியும் என்பது உறுதி.



நம் ஒவ்வொருவரும் எமது சொத்துக்கள் போல் பொதுச் சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு அரசும் தம் மக்களுக்கென ஏராளமான சொத்துக்களை வர்க்க வேறுபாடில்லாது வழங்கி வருகின்றது. மக்கள் தம் நாட்டில் உள்ள அரசிற்கு வழங்கப்படுகின்ற ஊதியத்தின் மூலம் கிடைக்கப் பெற்றதே பொதுச் சொத்துக்கள். நாம் பொதுச் சொத்துக்களை பாதுகாத்து வைத்தால் தான் நமது அடுத்த சந்ததியினர் பயனுறிதிப்தாக பயன்படுத்துவார்கள். எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும். பொதுச் சொத்துக்களை பாதுகாத்து பராமரிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரது உரிமையாகும்.

அடுத்து ஒரு நாட்டின் நலனை பேணுவது அந்த நாட்டில் உள்ள கல்விமான்களே. அதனை நாம் உணராது பாடசாலைக் கட்டிடங்கள், தளபாடங்கள் பாடநூல்கள் போன்றவற்றை உடைத்தும் கிழித்தும் தேவையற்ற பொருள் போல எறிந்து விடுகின்றோம். பாடநூல்களை பாதுகாத்து வைத்தால் நமது அடுத்த சந்ததியினருக்கு பயன்படும் நூலகங்களில் உள்ள ஜன்னல் கதவுகளை உடைத்தல்,


சுவரோரங்களில் நிறங்களினால் கீறுதல் போன்ற செயற்பாடுகளினால் கல்வி சீர்குலைக்கப்படுகின்றது. எமது நாட்டின் கண்களாக போற்றப்படுகின்ற சிறுவர்களின் வாழ்வு முரண்பட்ட நிலையில் காணப்படுகின்றது. "இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்" என்னும் நிலை இவ்கல்வியின் சீர்குலைவு மனித முன்னேற்றத்துக்கு தடையாகின்றது.



இவ்வாறு நம் நாட்டில் வாழுகின்ற பிரஜைகளாகிய நாம் நம் அரசினால் வழங்கப்படுகின்ற பொதுச் சொத்துக்களை பாதுகாத்து எமது சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாக வாழ்வோம். என்ற நோக்கத்துடன் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' என்ற பழமொழியைப் கடைப்பிடித்து வாழ்வதோடு அனைவரும் ஒன்றிணைந்து வர்க்க வேறுபாடில்லாது புரிந்துணர்வுடன் செயற்பட்டு பொதுச் சொத்துக்களை எமது நாட்டின் நலனுக்காக பாதுகாக்கலாம் எமது எனது உறுதி.

**செல்வி. சிவராசா சுகாஷினி**
மட்/வாகரை மகா வித்தியாலயம்
சிரேஷ்ட பிரிவில் 1ம் இடம் பெற்ற கட்டுரை.

# இயற்கை மருத்துவத்தில் அருமருந்தாகும் காய்கறி கிழங்கு வகைகளும், தானியங்களும்.




மனித வாழ்வு மகத்தானது. வாழ்கின்ற காலத்தில் நல்ல விதத்தில் வாழ வேண்டும் என்றுதான் அனைவரும் ஆசைப்படுகிறார்கள் அதற்கு அடிப்படை நல்ல ஆரோக்கியம், அதனைப் பெறுவதற்காகவும், நோய்களைக் குணப்படுத்திக் கொள்வதற்காகவும், மனிதன் பல்வேறு வழிகளை நாடுகின்றான். அதில் தலையாயது மருத்துவம். மருத்துவத்தில் பல பிரிவுகள் காணப்படுகின்றபோதிலும், அதனை நவீனமருத்துவம், ஆயுள்வேத மருத்துவம் என்கின்ற இரு பெரும் பிரிவுகளுக்குள் உள்ளடக்கி விடலாம். இங்கு நாம் ஆயுள்வேத மருத்துவத்தில் அருமருந்தாகும் காய்கறி கிழங்கு வகைகளையும், தானியங்களையும் நோக்கலாம்.

நாட்டுவைத்தியம், கிராமியவைத்தியம், கைவைத்தியம், ஆயுள்வேத வைத்தியம், பாட்டிவைத்தியம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்ற இயற்கை வைத்தியமானது இயற்கையினை அடிப்படையாகக் கொண்டது. நாம் வாழும் சூழலில் காணப்படுகின்ற இயற்கைத் தாவரங்கள், மூலிகைகள், செடிகொடி வகைகள், தானியங்கள், பழங்கள் அனைத்தும் ஏதோ ஒருவிதத்தில் மனிதனின் பிணி தீர்க்கும் மூலிகைகளாகவே காணப்படுகின்றன. பண்டைக்காலம் தொடக்கம் இன்றுவரை பாரம்பரியமாகப் பேணப்பட்டு வரும் இயற்கை வைத்தியமுறைமை ரிஷிகளாலும், முனிவர்களாலும், சித்தர்களாலும் உருவாக்கப்பட்டது. தெய்வீகத் தன்மை வாய்ந்தது என்ற கருத்தும் உண்டு.

மனிதனின் பிணி தீர்க்கும் மகத்தான குணாம்சத்தை நாம் இயற்கையில் உட்கொள்ளும் காய்கறி, கிழங்குவகைகளும் கொண்டுள்ளன. பொதுவாக எமது உடலில் ஏற்படும் அன்றாட பிரச்சினைகள் தொடக்கம் நீண்டகால நோய்களுக்கும் காய்கறி கிழங்குவகைகள் அருமருந்தாகின்றன. அவ்வாறான காய்கறிகள், கிழங்குவகைகள் சிலவற்றை நோக்குவோம்.

## கத்தரிக்காய்



கத்தரிக்காயில் அதிக நார்ச்சத்து உள்ளது. ஜீரணத்துக்கு நல்லது. பல வகையான விட்டமின்கள், இரும்புச்சத்து போன்றவை காணப்படுகின்றன. மேலும் அதன் மருத்துவக் குணங்களை நோக்கினால் பசி உண்டாக்கும் தன்மையுடையது. இரத்தத்தை சுத்தப்படுத்தும், இதில் சோடியம் குறைவாக இருப்பதால் இரத்த அழுத்தமுடையவர்கள் தைரியமாக சாப்பிடலாம். மலச்சிக்கல், நரம்புத்தளர்ச்சி என்பவற்றை குணப்படுத்த வல்லது. அதிகமாக எண்ணெய்யினை உறிஞ்சும் தன்மை கொண்டதாக இருப்பதால் ஜீரணக்கோளாறு உடையவர்கள் வேகவைத்து உண்ணலாம்.

## முட்டைக் கோஸ்

முட்டைக்கோஸ் சாற்றில் தேன் கலந்து பருகினால் தொண்டைப்புண் ஆறும், வயிறு, மற்றும் கருப்பையில் தோன்றும் கட்டிகளைத் தடுக்கும் சக்தி இதற்கு உண்டு. இதன் சாற்றுடன் கரட்சாறு கலந்து தேன் சேர்த்து பருகினால் இரத்தச்சோகை நோய் நீங்கும். மேலும் இதன் சாற்றோடு வெள்ளரிச்சாறும், கருஞ்சீரகம், மிளகு என்பன கலந்து பணம் கற்கண்டோடு உண்டால் வயிற்று நோய்கள் குணமாகும். மேலும் பச்சையாக கடித்து உண்டால் இரத்த ஓட்டத்திற்கு நல்லது. குடல்புண்களை ஆற்றும், வாயுத்தொல்லை, நெஞ்சுவலி போன்றவற்றுக்கும் சிறந்த நிவராணி ஆகும்.

## வெண்டைக்காய் (வெண்டிக்காய்)

வெண்டிக்காய் பொதுவாக அனைவராலும் விரும்பி உண்ணப்படும் மரக்கறி ஆகும். இது போசணைச் சத்துக்கள் நிறைந்தது. நினைவாற்றலை பெருக்கும். உடலுக்கு குளிர்ச்சி தரும். இதனோடு புளிசேர்க்காமல் இருப்பது கூடுதல் பயன்தரும்.

## பீட்ரூட்



கொழுப்புச் சத்தற்றது. இதன் சிவப்பு வண்ணத்தில் (பீட்டாகரோட்டின்) எனும் புற்றுநோயினை தடுக்கவல்ல சத்து உள்ளது. மேலும் பீட்ரூட் நமது உடலின் பிராண வாயுவை உறுஞ்சும் சக்தியை அதிகரிக்கின்றது. இத்தோடு இதன் சிவப்பு நிறத்தில் காணப்படுகின்ற ∴போலசின், பீட்டாகரோட்டின் என்பன கருத்தரிக்கும் பெண்களுக்கு ஊட்டச்சத்தாக அமைகின்றது. இரத்த சுத்தி, இரத்த விருத்தி உண்டாக்கும். நரம்புத்தளர்ச்சியை நீக்கவல்லது. உடல் வளர்ச்சிக்கு உகந்தது.

## வெள்ளைப் பூண்டு



கூடிய மருத்துவக் குணம் கொண்டது வெள்ளைப்பூண்டு. இதன் வாசனைக்கு இதில் காணப்படும் சல்ஃபெட் கலவைதான் காரணம். இதன் மருத்துவக்குணம் அதன் வாசனையில்தான் தங்கியுள்ளது. இதயநோய்க்கு மருந்தாக அமையும். இது கொழுப்பை குறைக்கும் சக்தி கொண்டது. தினமும் இரண்டு பல் பூண்டை உணவில் சேர்த்துக் கொண்டால் வாயுத்தொல்லை வராது. அஜீரணம், வயிறு உப்புதல் நீங்கும். புற்றுநோய் வராமல் தடுக்கும் சக்தி பூண்டுக்கு உண்டு. பூண்டைத் தட்டி சாறெடுத்து வடிகட்டி அதனைக் காய்ச்சி ஆறிய தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து சூடு பறக்கத் தேயத்தால் வாதவலி நீங்கும் சுளுக்கெடுக்கவும் பயன்படும்.

## புடலங்காய்

எளிதில் ஜீரணமாகும். வயிற்றில் காணப்படும் பூச்சுத் தொல்லைக்கு சிறந்தது. வாத, பித்த, கபத்தை போக்கவல்லது. உடல் பருக்க உதவும். சூட்டுடம்புக்காரர் இதனை குறைவாக உண்டால் நலம்.

## உருளைக்கிழங்கு



உடலுக்கு வலிமை தருவதோடு சருமநோய், நரம்புநோய், போன்ற உடல் அழற்சியைப் போக்கவல்லது. புரதச்சத்து நிறைந்தது.

## வாழைத்தண்டு

குடலில் சிக்கியமுடி, தோல், நஞ்சு ஆகியவற்றை நீக்கும், பித்தத்தை தணிக்க வல்லது. மட்டுமல்லாமல் உடல் உஷ்ணத்தையும் போக்கும்.

## பலாக்காய்

மூளைக்கு வலுச்சேர்க்கும் வீரிய பூஷ்ரி உண்டாக்கும். பிரவசமான பெண்களுக்கு பால்சுரக்கும், உடலுக்கு குளிர்ச்சி தரும்.

## பீர்க்கங்காய்



வயிற்றுத் தொந்தரவுகளை நீக்கும். இரத்தம் சுத்தியாகும். உடலுக்கு குளுமை தரவல்லது.

## கரட்



இரத்த ஓட்டம், இதயம், குடல், கல்லீரல், மண்ணீரல், மூளை ஆகியவற்றை நன்கு செயற்பட வைக்கும். கண்பார்வைக்கு நல்லது. நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது.


## முருங்கைக்காய்

உடலுக்கு வலிமைதரும். சிறுநீர் தாது புஷ்டி உண்டாக்கும். கர்ப்பப்பை கோளாறுகளுக்கு நல்லது.

## பாகற்காய்

நீரழிவு நோயாளிகளுக்கு மிகவும் உகந்தது. சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் வயிற்றில் ஏற்படும் பூச்சிக் கோளாறுகளுக்கு மிகவும் சிறந்த நிவராணி ஆகும்.

## சிறு வெங்காயம்



கண் பார்வைக்கு நல்லது. குடல் புண்ணை ஆற்றவல்லது. இரத்தத்தை சுத்தியாக்கும்.

## கருணைக் கிழங்கு

மூல நோயைக் குணமாக்கும். அரிய உணவு மருந்தாக கருணைக்கிழங்கு திகழ்கின்றது. எவ்விதமான தீங்கும் செய்யாத காரணத்தினாலேயே இதனைக் கருணைக்கிழங்கு என்கின்றனர். வாதநோய்க்காரர்கள் உட்பட அனைத்து வயதினரும் உண்ணலாம். கிழங்குடன் புளிசேர்த்தே சமைத்து சாப்பிடவேண்டும். இல்லையேல் அரிப்பு ஏற்படும். இதயத்துடிப்பு சீராக இருக்கவும், இரத்தத்தில் உள்ள விஷப் பொருட்கள் உடனுக்குடன் சிறுநீர் மூலம் வெளியேறவும், நரம்பு மண்டலத்தை

தூண்டவும், இரத்தக்கொதிப்பு வராமலும் தடுக்கின்றது. மேலும் மலர்ச்சிக்கல் உள்ளோருக்கு சிறந்த உணவாகும்.

இவை போன்ற ஏனைய காய்கறி, கிழங்கு வகைகளும், மருத்துவக்குணம் நிறைந்ததாக காணப்படுகின்றன.

அடுத்து தானியங்களின் மகத்தான மருத்துவக்குணங்களை நோக்கின் சக்தி படைத்தவையாக காணப்படுகின்றன. அவற்றுள் மிகவும் சிறப்பாக கூறக்கூடிய தானியங்களாக நவதானியங்களைக் கொள்ள முடியும்.

## நவதானியங்களாவன :-

கோதுமை, பச்சரிசி, துவரை, பச்சைப்பயறு, கடலை, மொச்சைப் பருப்பு, எள்ளு, உழுந்து, கொள்ளு, என்பன அன்றாடம் உணவு வகைகளில் பயன்படுத்தும் இவை மனித உடலுக்கு ஆரோக்கியம் தருபவை.


## கோதுமை

பலருக்கு பிடித்த உணவு ரொட்டி, புட்டு என்பன போன்ற பல உணவு வகைகளைத் தயாரிக்கக்கூடியது. உடலுக்கு உஷ்ணத்தை அளிக்க வல்லது. நீரழிவு நோய், எலும்புருக்கி நோய், இருமல், ஈரல் சம்பந்தமான நோய்களுக்கு கோதுமை பத்திய உணவாகும். கோதுமை சிறுநீரைக் கட்டப்படுத்தும் இழந்த பலத்தையும் கொடுக்கும். அதனாலேயே நீரழிவு நோயாளர்களுக்கு கோதுமை உணவு கொடுக்கப்படுகின்றது. கோதுமைத் தவிடு கூட மருந்தாகும். கோதுமை மாவைக் களி போல் கிளறி கட்டிகளின் மேல் வைத்துக் கட்ட விரைவில் கட்டி பழுத்து உடையும்.

## பச்சரிசி


பச்சரிசி அன்னமானது தேகத்திற்கு பலத்தைக் கொடுக்கும். ஆதலால் தான் "அன்னமயா பிராணமயா" என்ற சொற்றொடர் பல மருத்துவ நூல்களில் பயன்படுத்தப்படுகின்றது. "எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்" என்பர் பச்சரிசியுடன் பச்சைப்பயறு கலந்து நெய் சேர்த்து கஞ்சி காய்ச்சி உண்டால் பித்தம் தணியும். உடல் அலுப்பு நீங்கும். வெயில் காலத்தில் பக்குவமாக வடிக்கப்பட்ட பச்சரிசி சாதத்தில் இரவில் நீரை ஊற்றி மறுநாள் அதனை வடித்து நீராகாரமாக உண்டால் வெப்பச் சூடு தணியும்.

## துவரை



வேக வைத்த துவரம் பருப்பை சோற்றில் கலந்து நெய்சேர்த்து உண்டால் சதைவளரும். குழந்தைகளின் உடல் மெலிவை போக்க பருப்புச் சாதத்துடன், கீரைகள் சேர்த்து கொடுக்கலாம். பத்திய பதார்த்தங்களில் சிறந்தது துவை ஆகும்.

## பச்சைப் பயறு



உடலின் பித்தத்தை நீக்கவல்லது. சளித்தொல்லையினை கொடுக்கவல்லது ஆதலால்தான் இதனை முளைகட்டியும், வேகவைத்தும் உண்ணும் பழக்கம் இருக்கின்றது. மேனி அழகை பேணும் பெண்கள் காய்ந்த ரோஜா இதழ்கள், மஞ்சள், பயறு போன்றவற்றை சேர்த்து அரைத்து பூசிக்குளித்து வந்தால் பெண்களின் முக அழகே தனிதான்.

## கொண்டைக் கடலை

தேக பலத்துக்கு சிறந்தது கொண்டைக்கடலை, இந்தக் கடலையை சிறிதளவு நீரில் போட்டு இரவு ஊறவைத்து, காலையில் சாப்பிட்டு, உடல் பயிற்சி செய்து வந்தால் தேகம் உரமாகும். இது நுரையீரலுக்குப் பலத்தைத் தரும்.

## மொச்சை பருப்பு

இதனைப் பச்சையாகவும், அல்லது உலர்ந்த மொச்சைப் பருப்பினை ஊறவைத்து தாளித்து உண்ணலாம். இது தேகத்திற்கு எழிலைக் கொடுக்கும்.

## எள்ளு, கொள்ளு

"இளைத்தவனுக்கு எள்ளும், கொழுத்தவனுக்கு கொள்ளும் கொடு" இப்பழமொழி இவ்விரண்டு தானியங்களினதும் குணத்தை அழகுற விளக்குகின்றது.

இளைத்த உடலைப் பருக்க வைப்பது எள் எள்ளில் இருந்து எடுக்கப்படும். நல்லெண்ணெய் புத்தித்தெளிவு, மனமகிழ்ச்சி, தேகபருமன் என்பவற்றைத் தரும். இது மட்டுமன்றி நேத்திரரோகம், கர்ண(காது), ரோகம், கபால உஷ்ணம் ஆகியவற்றிற்கு நல்லெண்ணெய் அருமருந்தாகும். சொறி, சிரங்கு என பல நோய்களைத் தீர்ப்பதாலேயே நல்லெண்ணெய் எனப்படுகின்றது. இதனாலேயே எம்முன்னோர் வாரமொருமுறை எண்ணெய் தேய்த்துக் குளித்து ஆரோக்கியமாக இருந்தனர்.

கொள்ளும் சிறந்த மருத்துவக் குணம் உடையது. கொள்ளை நீரில் வேகவைத்து அதனை வடிகட்டி அதில் உப்பு, புளி, காரம் சேர்த்து ரசமாகப் பருகினால் வாயு சமனாகும். மேலும் கொள்ளு நீர்த்தாரைகளில் ஏற்படும் கற்களைக் கரைத்து வெளியேற்றும் குணமுடையது.

## உழுந்து

நல்ல உழுந்து இடுப்புக்கு உறுதி இதனை உணர்ந்தாலே இயன்றளவும் எமது கிராமங்களில் பூப்படைந்த பெண்ணுக்கு உழுத்தம் களி கொடுக்கும் பழக்கம் இருந்து வருகின்றது. உடலுக்கு நல்ல பலத்தையும் கொடுக்கும்.

எனவே ஆரோக்கிய வாழ்வின் அஸ்திவாரமாக திகழ்பவை இயற்கையில் கிடைக்கின்ற காய்கறி, கிழங்குவகைகள், பழங்கள், மற்றும் தானியவகைகளும் ஆகும். அவை அன்றும், இன்றும், என்றும் மனித குலத்தின் ஆரோக்கியத்தை பேணிக்காக்கும் மருத்துவக்குணம் படைத்த மூலிகைகளாகவே இருந்து வருகின்றன. எனவே உடல் ஆரோக்கியம் பெற அருமருந்தான நல்ல காய்கறிகள், கிழங்குவகைகள், பழவகைகளும் அத்தோடு தானியவகைகள் என்பவற்றை எமது உணவில் சேர்த்து ஆரோக்கிய வாழ்வு வாழ்வோமாக!

- நன்றி -

**ஆக்கம்:**
**அற்புதராசா ஜெயக்குமணன்** (B.A)
திருமலை வீதி,
வாகரை.

# கலாசாரத்தின் மாற்றம்



அன்று அதிகாலையிலே எழுந்த துளசி தனது வீட்டு வேலைகளை மிக விரைவினிலே முடித்துக் கொண்டு தனது கணவனுக்கு தான் செய்ய வேண்டிய கடமை அனைத்தையும் மிக விரைவினிலே நிறைவேற்றி விட்டு தூய்மையாக குளித்து சருகை பட்டுச் சேலையை கொசுவம் விட்டுக் கட்டிக் கொண்டு நெற்றியின் நடுவினிலே திலகம் போன்ற பொட்டையும் இட்டுக் கொண்டு சுவாமி அறைக்குச் சென்று தனது தாலிக்கு குங்குமம் இட்டு சுவாமியை விழுந்து நமஸ்கரித்து அதன் பின் தனது கணவனின் காலையும் தொட்டு வணங்கி அன்றைய பொழுதை ஆரம்பித்தாள்.



துளசி ஒரு கிராமத்தில் பிறந்த பெண் அங்கு தமிழர் மட்டும்தான் வாழ்கின்றார்கள். ஆனால் அவள் திருமணம் ஆகி நகரத்துக்கு வந்து விட்டாள். துளசியின் கணவன் நகரத்தை சேர்ந்தவன் ஒரு பெண்ணானவள் திருமணம் ஆகினால் அவளது கணவன் இருக்கும் இடத்துக்கே வருவது எமது மரபுவழி வந்த பண்பாகும். அவ்வாறே துளசியும் தன் கணவன் வீட்டுக்கு வந்து விட்டாள் துளசியின் கணவன் கோவிந்தன் அவன் பிரபலமான ஒரு கம்பெனியில் வேலை பார்க்கின்றான். ஆனால் துளசி ஆரம்பப்பிரிவு வரையே படித்தவள். அத்துடன் அவளுக்கு கிராமத்துக்கலாச்சாரமே பழகி போன ஒன்றாகும். இருந்து தனது கணவன் கோவிந்தன் அடிக்கடி கூறுவது "இஞ்ச பாரு துளசி இது நீ பிறந்த கிராமத்தை போல இல்ல இது நகரம் அதுக் கேற்ற மாதிரி நீ உன்னை மாத்திக்கனும் என்பான்" அதற்கு துளசி "அத்தான் நீங்க சொன்னால் போல என்னால எடுத்தொண்னே மாற ஏலாது இருந்தும் ஒங்களுக்காக நான் என்ன மெல்ல மெல்லவா மாத்தப் பாக்கிறன்." என்பாள். இவ்வாறு துளசி தனது கணவனுக்கு கூறியதுடன் நகரம் என்றால் எப்படி இருக்கிறது. "இங்க என்னப்பா எத்தனையோ இனம் வாழ்றாங்க ஒரு பக்கம் பாத்தா முஸ்லீம், சிங்களம், பறங்கி என்னு எம்புட்டு பேர் இருக்காங்க என்று தனக்குள் கூறுவாள்.

துளசி அசல் கிராமத்துப் பெண் அத்துடன் கல்யாணம் ஆனபின்பு தான் வெளி உலகத்தையே ஒருவாறு அறிந்து கொண்டாள். துளசி தனது கணவனிடம் அடிக்கடி கூறுவாள். "என்ன அத்தான் இங்க எங்க ஊருமாதிரி வயல் காடு அப்படி இப்படின்னு ஒண்ணுமே இல்ல என்பாள். அதற்கு கோவி "துளசி கிராமத்துக்கும் நகரத்துக்கும் பல மாற்றங்கள் உண்டு நீதான் உன்ன மாத்திக்கனும்" என்று முன்பு கூறிய வார்த்தையையே அடிக்கடி கூறுவான். இவ்வாறு தான் துளசியின் வாழ்க்கை நகரத்தில் நடக்கிறது. அன்று அப்படித்தான் தனது கணவனுக்கு சாப்பாட்டை கட்டி எடுத்து மேசையில் வைத்துவிட்டு தன் வேலையை கவனிக்கத் தொடங்கியிருந்தாள் துளசி. அப்போது கோவி "துளசி நான் வேலைக்குப் போயிற்று வாறன் என்று கூறிவிட்டு கோவிந்தன் வாசல் படியைத் தாண்டி சென்று விட்டான்.



துளசி உள்ளே வேலையில் இருந்ததால் "சரி அத்தான் போயிற்று வாங்க என்று கூறிவிட்டு தன் தவறை உணர்ந்து சாப்பாடு எடுத்திட்டுப் போறிங்களா" அத்தான் என்று கூறிவெளியே வரும் போது அவன் தனது மோட்டார் வண்டியை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டான். துளசி உள்ளே சென்று பார்த்த வேளை சாப்பாடு மேசையிலே இருந்தது. அதை எடுத்துக் கொண்டு துளசி "ஐயோ இவர் சாப்பாட்டை எடுத்துப் போக மறந்து விட்டாரே இப்போது என்ன செய்வது என்று யோசித்து விட்டு சாப்பாட்டை கையில் எடுத்துக் கொண்டு தன் வீட்டுக் கதவை அடைத்து விட்டு ஆட்டோ ஒன்றை பிடித்து தனது கணவன் வேலை பார்க்கும் கம்பனியை நோக்கிச் சென்றாள். அங்கு அவள் சென்று பார்த்த போது கம்பனியின் வெளியில் யாரும் இல்லை. துளசி உள்ளே சென்று அங்கு தற்செயலாக வெளியில் நின்ற பியூனிடம் தனது கணவனின் அறையை கேட்டுக் கொண்டு உள்ளே சென்றாள் அவள் அப்போது தனது கணவனுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டும் என்ற ஒரு நோக்கே அவளிடம் இருந்தது அதனால் தன்னை மறந்து தனது கணவனின் அறைக்கதவை திறந்து உள்ளே சென்றாள் அங்கு தனது கணவன் முக்கிய பிரமுகர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தான்.

அப்போது அங்கு நின்ற துளசியைக் கண்ட கோவிந்தன் தன்னை நோக்கி அவள் வரும் முன்பே எழுந்து சென்று துளசியிடம் "துளசி இங்க உன்ன யார் வரச் சொன்னது என்று கடித்துக் கொண்டான் பிறருக்கு கேட்காத வகையில்

"அதற்கு துளசி தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு "இல்ல அத்தான் நீங்க சாப்பாட எடுத்து வர மறந்திட்டிங்க என்றாள். அதற்கு கோவிந்தன் "உனக்கு என்ன தெரியும் எண்டு வந்த நீ இங்க பல்வேறுபட்டவங்க வேலை பார்க்கிறாங்க அதைப்புரியாம நீ இங்க வந்திருக்க அவங்க எல்லாம் என்னபத்தி எவ்வளவு கதைக்கப் போறாங்க தப்பா என்றான். இதைக் கேட்ட துளசி என்ன மன்னிச்சி கொள்ளுங்க அத்தான்" என்று கூறிவிட்டு வெளியே வந்து விட்டாள். துளசியை அனுப்பி விட்டு கோவிந்தன் உள்ளே சென்று அங்கிருந்த தன்னுடன் வேலைபார்க்கும் பிரமுகர்களுடன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தனது இருக்கையில் உக்கார்ந்தான். அப்போது அங்கிருந்தவர்களில் ஒருவர் "என்ன கோவி அது உங்க மனைவியா" என்று கேட்டான். அதற்கு கோவி "ஆமாம்" என்று குனிந்து கொண்டே ஆமாம் என்றான்.

என்னமிஸ்டர் கோவி "நீங்க எவ்வளவு குடுத்து வச்சனீங்க உங்க மனைவி காலடிக்கு கொண்டு வந்து உணவு கொடுத்து விட்டுப் போறாங்க" இத இப்படி சோகமாகச் சொல்றீங்க என்றார். அப்போது கோவிந்தன் தனது மனைவியை ஒரு நிமிடம் நினைத்துப் பார்த்தான். தனக்கா எவ்வளவு தியாகம் பண்ணிய இவளை நாம் மனம் நோகும்படி செய்து விட்டோமே என்று நினைத்து விட்டு முதலில் வேலை முடிந்ததும் வீட்டுக்குச் சென்று மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நினைத்தான். அவன் எதிர்பார்த வேளையும் வந்தது. வீட்டுக்கு சென்ற கோவிந்தன் தனது மனைவியின் அருகில் சென்று "துளசி என்ன மன்னித்துக் கொள்" என்றான் அதற்கு துளசி "ஐயோ நீங்கதான் என்ன மன்னிக்கனும் என்று கூறினாள்.

அன்றிலிருந்து கோவிந்தனும் துளசியும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு தங்களது வாழ்வில் இல்லறம் சிறப்பாக அமைய விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு என்பன கொண்டு வாழ்ந்தார்கள்.

**செல்வி. கிருபைநாதன் சாமிளா**
மட்/வாகரை வித்தியாலயம்
சிரேஷ்ட பிரிவில் $1^{ம்}$ இடம் பெற்ற கதை
தரம் - 13

# தேசமே என் அன்னை



வாழ்க்கடலில் எம்தாய் அன்னைபோல
அகிலத்தில் ஓங்கி விளங்கும் தேசமே ~ என் அன்னை
தீப ஒளியாய் விளங்குகின்ற
தேசமே விளங்கி நின்று கதிரொளியாய்



விளங்கி நிற்க்கும் தேச அன்னை
தாய்போலே எழுந்து நின்று
உயிரகளெல்லாம் காக்கின்ற
தெய்வமே உன்பாதம் பணிவேன்.............

அகிலத்தில் வாழ்கின்ற
ஜீவராசி என்றும் நிலைத்திடவே
வினைகளெல்லாம் தாங்குகின்ற
தெய்வமே தேசம்மம்மா........................

காலங்கள் கல கடந்து
துன்பத்தில் எழுந்து நின்று
இன்பத்தில் தலை நிமிர்ந்து
எங்களெல்லாம் காத்தருள்வாய்

சோகங்கள் நீங்கி நின்று
சரித்திரத்தில் இடம் பிடித்து
தத்துவமாய் எழுந்து நின்று
தேசம் போல் காத்தருள்வாய்

ஆறடி மண் என்று அனைவரையும்
பெற்றெடுத்து கடவுளிடம்
ஒப்படைத்து நற்பணிகள்
செய்திடவே வழிகள் பலகாட்டிடுவாய்.



**செல்வன். கு. வசந்தராஜ்**
மட் / கதிரவெளி விக்னேஸ்வரா
வித்தியாலயம்,
சிரேஷ்ட பிரிவில் 1ம் இடம் பெற்ற கவிதை
தரம் - 11

# நகரமயமாக்கம் எமது சமூக கலாச்சார குடும்ப உறவுகளில் ஏற்படுத்திய தாக்கமும் மாற்றமும்

நகர மயமாக்கம் ஆனது பொருளாதார வளர்ச்சி, சனத்தொகை வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக ஏற்பட்டது எனலாம். இவ் வளர்ச்சியினால் உருவாகும் நகரம் ஆனது அரசியல் மையமாகவும், அதிகார மையமாகவும் செல்வாக்கு நிறைந்த இடமாகவும், காணப்படுகிறது.



பழங்காலத்தில் இருந்தே நகரங்கள் இருந்தன என்பதற்கு சான்றுகள் காணப்படுகின்றன. மொசப்பததேனியா, மொகஞ்சதாரோ கரப்பா போன்ற நகரங்கள் நீர்ப்பாசனத்தைச் சார்ந்தே நதிக்கரையோரங்களில் வளர்ந்தன எனலாம். எங்கு வேளாண்மை தொழில் அதிகமாக இடம் பெறுகிறதோ அங்கு விரைவாக நகரமயமாக்கம் இடம் பெற வாய்ப்பு உள்ளது. நகரங்களிலே கலை, விஞ்ஞானம், பொருளாதாரம், கல்வி, போன்ற துறைகளும், நவீன சிக்கலான தொழில்கள், வாணிபம், தொழில்நுட்ப வளர்ச்சி, போக்குவரத்து, கப்பல்சேவை, விமானசேவை, கைத்தொழில் பேட்டைகள், தொழிற்சாலைகள் மற்றும் மக்களுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள் அனைத்தையும் கொண்ட ஓர் மையமாக காணப்படுகிறது. நகரம் என்பதையும் கிராமம் என்பதையும் திட்டவட்டமாக வரையறுக்க முடியாது காணப்படுகிறது. ஏனெனின் எந்த அடிப்படையில் இவற்றை வரையறை செய்வது என்பதில் ஆய்வாளர்க்கிடையில் பெரிய வேறுபாடும் தெளிவின்மையும் காணப்படுகிறது எனலாம். சனத்தொகை அடிப்படையிலும், நில அளவு அடிப்படையிலும், உற்பத்தித் துறை அடிப்படையிலும் நகரம் என்பதற்கு பலர் விளக்கம் அளிக்க முற்பட்டுள்ளனர்.

இவ்நகரமயமாதல் ஆனது எமது சமூகத்தின் கலாச்சாரம், குடும்பம், கல்வி, உறவுகள், வாணிபம், தொழில்முறை, நடத்தைகள், கட்டுப்பாடுகள், தலைமைத்துவம், நம்பிக்கைகள் போன்ற அனைத்திலும் மாற்றத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

நகரமயமாதல் ஆனது எமது கலாச்சாரத்தை பொறுத்தமட்டில் பெருமளவு தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம். எமது






கலாச்சாரத்தில் திருமணம் குடும்பம், வாழ்க்கை முறை என்பன மிக இறுக்கமாகவும் கட்டுப்பாட்டுடனும் தொன்று தொட்டு புனிதமாகவும் பேணப்பட்டு வந்தது என்று கூறலாம். திருமணம் என்பது ''சொர்க்கத்தில் நிர்ணயிக்கப்படுவது" என்றும் அது "ஆயிரம் காலத்துப் பயிர்'' என்றும் அதனுடைய புனிதத் தன்மை விளக்கப்படுகிறது. ஆனால் நகரங்களில் ஆண் பெண் இருவருக்கிடையிலான ஓர் ஒப்பந்தமாகவே இது காணப்படுகிறது. கோயில்களிலும் பெரியவர் முன்னிலையிலும் இடம் பெற்ற திருமணங்கள் இன்று பொலிஸ் நிலையங்களிலும் பெரும் பகுதி பதிவுக்காரர் வீடுகளிலும் நடைபெறுகிறது. திருமணம் செய்யும் ஆண் பெண்களில் வயதும் நகரங்களில் அதிகரித்தே காணப்படுகிறது. ஆணுக்கு சராசரி வயது 35 ஆகவும் பெண்ணுக்கு 30 ஆகவும் காணப்படுகிறது. அத்துடன் நிறையப் பெண்களும் ஆண்களும் நகரங்களில் திருமணம் ஆகாகவே உள்ளனர். நகரத்திருமணங்களில் அதிகளவு காதல் திருமணங்களாகவே காணப்படுவதுடன் அதிகளவு விவாகரத்துவங்கள் காணப்படுகிறது. இதன் விளைவாக குடும்ப அமைப்பிலும் பெரிய அளவு மாற்றங்கள் காணப்படுகிறது எனலாம். ஆரம்ப காலத்தில் கூட்டுக் குடும்பமாகக் காணப்பட்ட குடும்ப அமைப்பு இங்கு கருக்குடும்பமாக or தனிக்குடும்பமாகக் காணப்படுகிறது. ஆரம்பத்தில் குடும்பத்தில் பெறப்பட்டு வந்த அனைத்து அம்சங்களும் பொதுவாக இன்று வெளியில் நிறுவனங்களில் இருந்து பெறக்கூடியதாக உள்ளது. மேலும் நகரங்களில் பெரிய குடும்பங்களுக்கு உரிய போதிய வசதி இல்லாததும் குடும்ப அங்கத்தவர் அனைவரும் தொழிலில் ஈடுபடுவதும் இதனால் தனியான போக்கும் சுயநலமும் அதிகரித்தும் காணப்படுகிறது.



கிராமப்புறத்தில் பலசாதி அமைப்புக்கள் காணப்பட்டு அங்கு பிரச்சினைகள் கிராமக்கட்டுப்பாடு கிராமத்தலைவர் என்பவற்றின் ஊடாகவும் தீர்க்கப்பட்டது. இக் கிராமத்தலைவர் பதவியானது அவருக்கு மரபுவழி வந்த பதவியாகவே காணப்பட்டது. ஆனால் இங்கு இருவர்க்கங்களே காணப்படுகிறது. அதாவது முதலாளி தொழிலாளி என்ற வர்க்கமே காணப்படுகிறது. நகர மக்களை சட்டமும் பொலிசுமே கட்டுப்படுத்துகிறது. கிராமத்தலைவரோ சாதி அமைப்போ குறைந்து போய் விடுகிறது. மேலும் இங்கு உள்ளூராட்சி அமைப்புக்கள் மூலம் நகரம் நிர்வகித்து வருகிறது. இத்தலைவர் ஆனவர் மக்கள் செல்வாக்கு




மிக்கவராகவும் கல்வி அந்தஸ்து போன்றவற்றில் உயர்ந்தவராகவும் பொதுவாக காணப்படுகிறார். மேலும் கல்வியே நகர மக்களின் அந்தஸ்தை தீர்மானிக்கிறது உயர்கல்வி கற்றவருக்கே அதிக அளவு அதிக சிறப்புகளும் மரியாதையும் வழங்கப்படுகிறது. கல்வி ஆனது சிறப்பான மனிதர்களால் பெற்றுத் தந்தாலும் எமது பாரம்பரிய கலை வடிவங்கள், இலக்கியங்கள், தத்துவங்கள் என்பனவற்றை முதன்நிலைப் படுத்துவதில் பின்நிலையிலே உள்ளது எனலாம். மதச் சடங்குகள். ஆன்மீக அளவிலும் சமூக அளவிலும் மனிதனை உயர் நிலைக்கு கொண்டு செல்கிறது. எனினும் நகர நிலையில் இது மதக்கண்ணோட்டத்தில் பார்க்கப்படாது சமூகப் பார்வையிலே முக்கியம் பெறுகிறது.

நகரமயமாதல் போக்கு குற்றங்கள் இழைப்பதை மிகவும் அதிகரித்துச் செல்ல வழிவகுத்துள்ளது. தனிமனித செயல்கள் குடும்பங்கள் கட்டுப்படுத்தாமல் விட்டதனால் கிராமத்தைக் காட்டிலும் நகர்புறங்களில் கொலை, கொள்ளை, வெட்டு, ஏமாற்று வழிப்பறி, என்பன அதிகளவாகக் காணப்படுகிறது. கிராமங்களில் ஊர்கட்டுப்பாடு, கிராமத்தலைவர் போன்றோர் கட்டுப்படுத்த நகரங்களில் சட்டமும் சட்டத்தை அமுலாக்குகின்ற நிறுவனங்களான காவல்துறை, நீதிமன்றம் ஆகியவையே மனிதனை கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன.

மேலும் இவ்நகர அமைப்பிலே உறவுகள் என்பன உதட்டளவிலே காணப்படுகின்றது எனலாம். இவ்உறவுகள் மனிதநேயம் கொண்டு பார்க்காமல் ஒப்பந்தங்கள் ஊடாகவே கட்டுப்படுத்தப் பார்க்கின்றனர். பெருவாரியான உறவுகள் பெயர் தெரியாத அந்நியருடனயே நடத்தப்படுகிறது. இவ்வுறவுகள் குறிப்பிட்ட தேவையை நிறைவேற்றுவதற்காக குறிப்பிட்ட கால இடைவெளிக்கே நடாத்தப்படுகிறது எனலாம். தனது பக்கத்து குடியிருப்பில் உள்ள வரைக் கூட அறியாத நிலையில் ஒருவர் குடியிருக்கும் சாத்தியமும் இவ் நகர வாழ்வில் காணப்படுகிறது. அதிகளவு நமது குடியிருப்புக்கள் அடிக்கடி மாற்றுவதனாலும் சமூக உறவானது பெரிதும் பாதிக்கப்படுகிறது எனலாம். நகர மயமாதல் ஆனது பல அடுக்கு மாறுதல்களைக் கொண்டுள்ளது. இந்த மாறுதல்கள் ஏற்பட ஏற்பட சமூககட்டுக்கோப்பு தளர்கிறது.



இதன் காரணமாக குடும்பம் தனிமனிதன், சமூகம், ஆகிய மட்டங்களில் பல பிரச்சினைகள் தோற்றுவிக்கிறது. பல ஆயிரக்கணக்கான மக்கள் கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு வேலை தேடி வருகின்றனர். போதிய இடவசதி குறைவினால் அவர்களுடைய குடும்பங்கள் அழைத்து வர முடிவதில்லை அவர்களுக்கு என்று ஒரு தனி வீடு கிடைப்பது இல்லை பொழுது போக்கு அம்சங்களும் நன்மை பயக்கும் அளவிற்கு அமையாமல் ஒழுக்க கோட்டிற்கே வழி வகுக்கின்றன. அவர்கள் மாது, மது, ஆகிய தீய பழக்கங்களுக்கு ஆளாகி மேலும் மேலும் சீர்குலைகின்றார்கள் இதனால் மேலும் ஒழுக்கம் பாதிப்படைகிறது.



எமது சமூக முக்கிய நிகழ்வுகளான திருமணம், கலாச்சார நிகழ்வுகள், மரணசம்பவங்கள் என்பன கூட ஒரு சில மணித்தியாலங்களில் நிறைவடைவதைக் காணக் கூடியதாக உள்ளது. கிராமத்தில் ஒருவர் இறந்தால் அவர் வீட்டில் கூரை முடிவைத்து பறைமேளம் ஒலிக்க சாதி இனம், சுற்றத்தாருடன் பாடையில் வைத்து எடுத்துச் சென்று மயானத்தில் எரிக்கும் நிகழ்வு நடைபெற்று பின் 3ம் நாள் சாம்பல் எடுத்து நதியில் கரைத்து 41ம் நாள் பிதிர்கடன் செய்து தானம் வழங்கும் நிகழ்வு கூட இன்று மலர்சாலைகளில் சில மணிநேரம் வைத்து மின்சாரத்தில் எரிக்கும் நிகழ்வுடன் இது முடிவடைவதைக் காணலாம்.

எனினும் நகரமயமாக்கம் ஏற்படும் போது ஆண், பெண் வேறுபாடு குறைந்து பெண் கல்வி அதிகரித்தும் பெண் அடிமைத்துவம் குறைந்தும், நகர பெண்கள் அலுவலகங்களில் பணி புரிந்தும் குடும்பத்துக்கு போதிய வருவாய் ஈட்டித் தரக்கூடியதாகவும் உள்ளது. மேலும் நவீன போக்குவரத்து சாதனம், தகவல் தொடர்புசாதனம் என்பவற்றின் ஊடாக உலகம் சம்பந்தமான அனைத்து விடயங்களையும் இம்மக்கள் அறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் காணப்படுகிறது. தொழிற்பிரிவு, தொழிற்தேர்ச்சி அடிப்படையில் மிகச் சிறந்த தொழிலில்லம் தொழிற்சாலைகளாக உருவாக வழிவகுத்தது எனலாம்.

**திரு. ஆர். கோகுலறஞ்சன்**
புள்ளிவிபர உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
வாகரை.

# கல்விச் சாலைகளே அறிவின் விளை நிலங்கள்.





ஒரு நாடு நாடாக
இருப்பதற்கு
நாட்டின் நாலா
நடத்தைக்கும்
கல்வியே ~ குரு

விஞ்ஞானிகளின்
விந்தை முதல்
விவசாயிகளின் வீரியம் வரை
கல்வியே ~ விதை தூவும் தரு

பண்டைய நாள் தொட்டு
பண்பட்ட பள்ளிக் கூடங்கள்
படிப்படியாய் பாங்குடன் வளர்வதற்கும்
கல்வியே ~ வளமாக்கி எரு



பொறியியலாளருக்கும் பொலிசாருக்கும்
வாத்தியாருக்கும் வைத்தியருக்கும்
நாடாளும் தலைவர்களுக்கும்
இன்னும் பல நடமாடும்
அதிகாரிகளுக்கும்
கல்வியே ~ அறிவூட்டிய குரு

உண்மை தான்
கல்விச்சாலைகளே
அறிவின் விளைநிலங்கள் ~ இந்த
உண்மையை
உண்மையில் உணராதவன்
உருவில் மனிதனாகவும்
உணர்வில் மிருகமாகவும்
அவனியில் அவதரித்த
மாக்கள்

**யோ.சுபதர்சினி**
மட்/வம்மிவட்டவான் வித்தியாலயம்
கனிஷ்ட பிரிவில் 1ம் இடம் பெற்ற கவிதை

# கௌரவிக்கப்படும் கலைஞர்கள்



**முழுப்பெயர்** :- கணபதி இளையதம்பி

**கௌரவிக்கப்படும் துறை** :- நாட்டுக்கூத்து

**விலாசம்** :- கண்டலடி, வாகரை


**பிறந்த திகதி** :- 1934.08.05

**தொழில்** :- கமம்


**துறையில் ஈடுபட ஆரம்பித்த காலப்பகுதி :-** தனது தகப்பனாருடன் இணைந்து 20 வயதில் இருந்து கூத்துக்களில் பங்குபற்ற ஆரம்பித்தமை

**பங்கு கொள்ளும் துறை :-** கூத்து

வடமோடியில் மகாபாரதக் கதைகளில் 18 நாள் சண்டை, இராமாயணக்கதை, இராமநாடகம், குயவலன் நாடகம் பரதனுக்கு பட்டம் சூட்டுதல் என கூத்துக்களை பழக்குவதிலும் அவற்றினை மேடையேற்றுவதிலும் முக்கியமான அண்ணாவியராகத் இருப்பதுடன் கூத்துக்கள் தொடர்பாக எழுதுவதிலும் பெயர் பெற்ற அண்ணாவியராகத் திகழ்கின்றார்.



# கௌரவிக்கப்படும் கலைஞர்கள்



**முழுப்பெயர்** :- வைரமுத்து அருணாசலம்

**கௌரவிக்கப்படும் துறை** :- விசவைத்தியம்

**விலாசம்** :- பால்சேனை கதிரவெளி

**பிறந்த திகதி** :- 1939.01.02

**தொழில்** :- மீன்பிடி

**துறையில் ஈடுபட ஆரம்பித்த காலப்பகுதி :-** தனது தகப்பனாருடன் இணைந்து 25 வயதில் இருந்து விச வைத்தியம் செய்ய ஆரம்பித்தமை

**பங்கு கொள்ளும் துறை :-** விச வைத்தியம்

இவர் தனது தகப்பனாரின் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் வைத்து விசவைத்தியம் செய்வதுடன் தனது வைத்தியத்திற்கு தேவையான மூலிகைகளை காட்டில் இருந்து பெறுவதுடன் நோயாளர்களுக்கு தனது வீட்டில் இருந்து வைத்தியம் செய்கின்றார். இவர் வெவ்வேறு விதமான பாம்புக்கடிகளுக்கு வெவ்வேறு விதமான வைத்திய முறைகளை கையாள்வதாக கூறுகின்றார். தான் அதிகமான நோயாளர்களை குணப்படுத்தி அனுப்பியதாக கூறுகின்றார்.



# கௌரவிக்கப்படும் கலைஞர்கள்



**முழுப்பெயர் :-** காத்தான் இராசரெத்தினம்

**கௌரவிக்கப்படும் துறை :-** நாட்டுக்கூத்து

**விலாசம் :-** சின்னத்தட்டுமுனை, வாகரை


**பிறந்த திகதி :-** 1955.07.22

**தொழில் :-** கமம்

**துறையில் ஈடுபட ஆரம்பித்த காலப்பகுதி :-** இவரது தகப்பன் சிறந்த அண்ணாவியார் ஆவார். அவருடன் இணைந்து சிறுவயதில் இருந்து கூத்துக்களில் ஆடியமை.

**பங்கு கொள்ளும் துறை :-** கூத்து

வடமோடியில் அமைந்த லவகுசா, இராமன் நாடகம், சுபத்திரை கலியாணம், 15ம் போர், 13ம் போர் போன்ற கூத்துக்களை பழக்கியும் அவற்றினை அரங்கேற்றியும் உள்ளமை. மேலும் கூத்துக்களை பழக்குவதில் எழுதுவதில் ஆற்றல் உள்ள அண்ணாவியாராக உள்ளார்.



# கௌரவிக்கப்படும் கலைஞர்கள்



**முழுப்பெயர் :-** மயில்வாகனம் தவராசா

**கௌரவிக்கப்படும் துறை :-** சமூக சேவை

**விலாசம் :-** புளியங்கண்டலடி, வாகரை

**பிறந்த திகதி :-** 1963.10.25


**தொழில் :-** வியாபாரம்

**பங்கு கொள்ளும் துறை :-** சமூகசேவை

இவர் சிறுவயது முதலே தன்னலம் கருதாது பிறருக்கு உதவுதல் என்ற உயரிய சிந்தனையுடையவராகவுள்ளார். சுனாமி, யுத்தம் போன்ற அனர்த்தங்களின் போது பலருக்கு இவர் எவ்வித எதிர்பார்ப்புக்களையும் பாராது பலவழிகளில் உதவியுள்ளார். அத்துடன் இவர் கோயில் நிர்வாகம், மற்றும் R.D.S தலைவராகவும் உள்ளார். இவரது சேவை ஏனையோருக்கு முன்மாதிரியாகவுள்ளது. மக்களுக்கு சேவை செய்வதே எனது வாழ்நாள் இலட்சியமாகும் என்று இவர் குறிப்பிடுகின்றார்.



# பாடசாலை வரலாறு



மட்டக்களப்பு மாவட்டத்தில் வடக்கே வாகரை என்று அழைக்கப்படும் பிரதேசம் அமைந்துள்ளது. மட்டக்களப்பு நகரிலிருந்து கிட்டத்தட்ட 73km தூரத்தில் அமைந்துள்ளது. வாகரை பிரதேசத்திலே ஆறு தசாப்த கால வரலாற்றை உடையதாக இயங்கிக் கொண்டிருக்கும் மட் / வாகரை மகா வித்தியாலயம் என்னும் எமது பாடசாலையானது.

இலங்கை சுதந்திரம் வேண்டி முனைப்புப் பெற்ற காலத்தில் வாகரையில் இக் கல்விச்சாலை கருக்கொண்டது. இதனை 1947ம் ஆண்டு ஆரம்பப் பாடசாலையாக தனது சொந்தக் காணியில் தற்றுணிவுடனும், பொதுநல நோக்குடனும் ஆரம்பித்தவர், அவ்வேளை வாகரைப் பிரதேசத்தின் உடையாராகவும் பெரும் நிலச்சுவாந்தராகவுமிருந்த உயர் திரு. அந்தோனிப்பிள்ளை பேதுருப்பிள்ளை அவர்களாவார்.

இவர் இப் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு முன்னேரயே வாகரையில் வெல்லையடிமடு என்னும் இடத்தில், றோமன் கத்தோலிக்க மிஷனரிமாராகப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. 1899இல் வண. பிதா. அல்போன்ஸ் மேரி அடிகளால் அது ஆரம்பித்து வைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. இப்பாடசாலை 1910 - 1915 காலப் பகுதியில் வாகரை புனித இராயப்பர் ஆலயத்திற்கு மேற்புறமாக ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இது கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை என்னும் பெயரால் அழைக்கப்பட்டது.

இத்தகைய நிலையில் வாகரைப் பிரதேசத்தில் பெரும்பான்மையினராக வாழ்ந்த இந்துக்களினது கல்வி மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டு அ. பேதுருப்பிள்ளை உடையார் முதற் குறித்த எமது பாடசாலையை ஆரம்பித்தார்.

இப்பாடசாலையில் கிண்ணையடி முறவோடையைச் சேர்ந்த திரு.க.ஞா பேரின்பநாயகம் என்பவர் முதல் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அப்போது 26 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். பின்னாளில் இப்பாடசாலையில் ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றிய திரு.செ. தவராசா அவர்களும் இம்முதல் தொகுதி மாணாக்கருள் ஒருவராவார். அக்காலப் பகுதியில் இடம் பெற்ற முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கல்குடாத் தொகுதி வேட்பாளராக

நியமிக்கப்பட்ட அமரர். வ. நல்லையா அவர்கள் வாகரைப் பிரதேசத்திற்கு வாக்குக் கேட்க வந்தபோது இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும் மென்ற கோரிக்கை அவரிடம் விடுவிக்கப்பட்டது.

இத் தேர்தலில் வெற்றி பெற்ற அன்னாரது முயற்சியால் இப்பாடசாலை ஏறத்தாழ ஓராண்டிற்குள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது. இதன்பின்னர் வாகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை என, இது பதிவு செய்யப்பட்டது. எனினும் 'சைவப் பள்ளி' என்றே ஊர்மக்களால் இது நீண்ட காலமாக அழைக்கப்பட்டது.

1950களில் முதற் பகுதியில் மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. நமசிவாயம் என்பவர் தலைமை ஆசிரியரானார் இவரது காலத்தில் தலைமையாசிரியருக்கான விடுதி அமைக்கப்பட்டது. மாணவர்கள் ஊக்கமுடனும், விழிப்புணர்வுடனும் கல்வி கற்க இவர் பெருந்துணை புரிந்தார். இவரது மகனும் பின்னாளில் இலங்கை நிர்வாக சேவையில் பெறுப்பு வாய்ந்த பதவிகள் பலவற்றை வகித்து சிறப்புடன் பணியாற்றியவருமான திரு.ந. பத்மநாதன் அவர்களும், அவ்வேளை வாகரை பிரசவ விடுதியின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமாகக் கடமையாற்றிய வைத்தியர் திரு. S. இராசலிங்கம் அவர்களின் மகனும் பின்னாளில் வடகிழக்கு மாகாண சபையில் கல்வி அமைச்சின் செயலாளராகவும் அரும்பணி புரிந்த திரு. இ. தியாலிங்கம் அவர்களும் இக்கால கட்டத்தில் இப்பாடசாலையில் தத்தமது ஆரம்பக்கல்வியை மேற்கொண்டவர்கள்.

இதன் பின்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. ஆ. குமாரசுவாமி என்பவர் தலைமையாசிரியராக கடமையாற்றிய காலத்திலும் பாடசாலை அபிவிருத்தி அடைந்தது. குறிப்பாக மொழி மற்றும் இந்துமத வளர்ச்சியைக் கருத்திற் கொண்டதான விழாக்கள் நடாத்தப் பெற்றன. 1963இல் 90 அடி நீளமுள்ள கட்டிடம் ஒன்று கட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இப்பாடசாலை இயங்கிய போது 1965ல் இவர் இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து இங்கு பணியாற்றிய திரு. க. கணபதிப்பிள்ளை, திரு. க. அருளம்பலம், திருமதி. செல்வராணி போன்ற திறமையும் கலையார்வமும் மிக்க ஆசிரியர்களும் இடமாற்றம் பெற்றுச் சென்றமையால் அதன் வளர்ச்சி சிறிது தேக்க நிலையை அடைந்தது. இதன் பின்னர் இங்கு ஆசிரியராகப் பணியாற்றிய திரு. S. யோசப் அவர்கள் இப்பாடசாலையின் பதில் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார்.

இவரது காலத்திலேயே முற்குறிப்பிடப்பட்ட றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை மூடப்பட்டு அங்கு பயின்ற மாணவர்கள் அனைவரும் வாகரை

தமிழ்க் கலவன் பாடசாலையில் இணைக்கப்பட்டனர். இதன் பின்னர் மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. க. தியாகராசா என்பவர் தலைமையாசிரியரானார். இவருடைய காலத்தில் பாடசாலை மட்டத்தில் விவசாய நடவடிக்கைகளும், இல்ல விளையாட்டுப் போட்டிகளும் நடாத்தப்பட்டன. மாணவர் வரவும், கல்வித் தரமும் அதிகரித்தது.

இச்சந்தர்ப்பத்தில் இப்பாடசாலையைத் தரமுயர்த்த வேண்டுமென்ற அவா இப்பிரதேசத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் மற்றும் அபிமானிகளிடம் எழுந்தது.

இதன் பயனாக கல்குடாத் தொகுதியன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான அமரர். திரு. K.W. தேவநாயகம் அவர்களின் முயற்சியினால் இப்பாடசாலை 1968இல் மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டது.. மட்/ சிவானந்தா பாடசாலையில் பிரபல கணித ஆசிரியராக இருந்தவரும், பின்னாளில் மட்டக்களப்பு, நுவரேலியா ஆகிய பிரதேசங்களில் கல்வி அதிகாரியாகவும், மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்றிய மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. ஏ. கணபதிப்பிள்ளை ஆவார்.

'இவரது காலத்தில் சுற்றுலாக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு மாணவர்களுக்கான புறக்கிருத்திய நடவடிக்கைகள் ஊக்குவிக்கபட்டன. அத்துடன் பாடசாலையில் கலை விழாக்களும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் மட்டக்களப்பு மாவட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் இப்பாடசாலை சேர்ந்த மாணவர்கள் பலர் பங்குபற்றி வெற்றியீட்டியமையும் இவ்விடத்திற் குறிப்பிடத்தக்கது.

இவரின் பின்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் இலங்கையின் பிரபல எழுத்தாளரும் கஸின் என்று அழைக்கப்படுபவருமான திரு. க. சிவகுருநாதன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். இவரின் பின்னர் அங்கு ஆசிரியராகப் பணியாற்றிய திரு. பு. அன்ரனி அவர்கள் பதில் அதிபராகக் கடமையாற்றினார். தொடர்ந்து மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. S. விசுவாசம், திருமதி. குணலெட்சுமி வேலுப்பிள்ளை, மண்டூரைச் சேர்ந்த பண்டிதர் முருகேசு ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினார்.

இதன் பின்னர் வாகரையைப் பிறப்பிடமாகக் கொண்டு வரும் அவ்வூரின் முதற் பட்டதாரியுமான திரு. கு. அருள்நாயகம் 1975இல் அதிபராகப் பொறுப்பேற்றார். இவர் இரு தடவைகள் இப்பாடசாலையின் அதிபராகப் பணிபுரிந்தார். முதற் காலப்பகுதியில் தனது ஆசிரியர் குழுவினருடன் முதன் முதலாகத் தொண்டர் ஆசிரியர்களையும் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுத்தார். இதன் பயனாக 1975 டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியெய்தி முதல் முறையாக க.பொ.த (உ/த) ல் கல்வி கற்கும் தகுதி ஏழு

மாணவர்களுக்குக் கிடைத்தது. இவரது காலத்தில் மேலும் ஒரு கட்டிடமும் கட்டப்பட்டது.

1979இல் இவர் இடம்மாற்றம் பெற்றுச் சென்றதும் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த திரு. சிவபாதசுந்தரம் அவர்களும், அவரைத் தொடர்ந்து மட்டக்களப்பைச் சேர்ந்த திரு.பு. சிவநேசன் அவர்களும் பின்னர் திரு. S. நாகேந்திரம் அவர்களும் பின்னர் திரு. சிவராசா அவர்களும் இப்பாடசாலையின் அதிபர்களாக கடமையாற்றினர்.

தொடர்ந்து மீண்டும் 1985இல் திரு. கு. அருள்நாயகம் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் இன்னுமொரு கட்டடமும் மனையியல் கூடமொன்றும் கட்டப்பட்டன. 1987ல் க.பொ. (உ/த) வகுப்புக்கள் ஆரம்பமாகின.

1985இல் கொத்தணிப் பாடசாலை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது கோட்டத்தின் முதன்மைப் பாடசாலையாக இது விளங்கியது. கொத்தணி அதிபராகக் பணியாற்றிய திரு. கு. அருள்நாயகம் அவர்கள், 1995 இல் வாகரைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றதைத் தொடர்ந்து இப்பாடசாலையின் முதல் தொகுதி மாணவர்களுள் ஒருவரும் பின்னர் இங்கு ஆசிரியராகப் பணியாற்றியவருமான திரு. செ. தவராசா அவர்கள் அதிபரானார். இவரைத் தொடர்ந்து திரு. K. அருள்பிரகாசம், செல்வி செல்வநாயகி, திரு. க. சுபாஸ்சந்திரன், திரு. P. பற்றிக் ரவீந்திரன், செல்வி. அ. வெஜினியாமேரி ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினர்

செல்வி. அ. வெஜினியா மேரி அவர்களின் காலத்தில் இப்பாடசாலையிலே ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த.(உ/த) வரை கல்வி கற்ற அற்புதராசா ஜெயக்குமணன் என்னும் மாணவன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் பாடசாலையின் முன்னேற்றம் கருதி இப் பிரதேசப் பெற்றோர், நலன் விரும்பிகள் மற்றும் பிரமுகர்கள் ஆகியோரின் விருப்பிற்கும் வேண்டுகோளுக்கும் இணங்க அவ்வேளை மட் / செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தவரும் வாகரைப் பிரதேசத்தைச் சேர்ந்தவருமான திரு. ஆ. கி. பிரான்சிஸ் அவர்கள் அதிபராக நியமிக்கப்படுவதற்கு வசதியாக 2004இல் இடமாற்றம் செய்ப்பட்டார். ஆயினும் சில அசாதாரண நிலைமை காரணமாக இது நிறைவேறாமை துரதிஸ்டமானது.

பின்னர் இப்பாடசாலையின் அதிபராக திரு. க. விஜயரெட்ணம் கடமையாற்றினார். அதனை அடுத்து தற்போது S. சுகுமார் அதிபராக

கடமையாற்றுகின்றார். 11 பட்டதாரி ஆசிரியர்கள் உட்பட 30 ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். மாணவர் தொகை 611 ஆகும்.


இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த.(உ/த) வரை கல்வி கற்றுப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான முதல் மாணவன் அற்புதராசா ஜெயக்குமணன் ஆவார். தற்போது தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று பட்டதாரியாக வெளியேறியுள்ளார்.

இயற்கை அனர்த்தங்களாலும் குறிப்பாக ஆழிப் பேரலைத் தாக்கத்தாலும் யுத்தச் சூழலாலும் வாகரைப் பிரதேசம் பல இன்னல்களையும், அவலங்களையும், இழப்புக்களையும் எதிர் கொண்டது. இவை எமது பாடசாலையின் வளர்ச்சியையும் பாதித்தன. மாணவர் வரவும் வீழ்ச்சியடைந்தது. தற்போது அசெகளரியமானதொரு சூழலிலேயே பாடசாலை இயங்குகின்றது. அதனை மீண்டும் புத்துயிர் பெறச் செய்ய வேண்டியது அவசியமானதாகும். ஆழிப் பேரலையின் பின்னர் இத்தாலி நிறுவனம் ஒன்றினால் பாடசாலைக் கட்டட நிர்மானப் பணிகள் வெகு சிறப்பாக ஆரம்பிக்கப்பட்ட போதும் அண்மையில் நடந்த யுத்த சூழ்நிலை காரணமாக அப்பணி கைவிடப்பட்டது.

தற்போது IOM என்னும் நிறுவனத்தால் மீண்டும் பாடசாலைக் கட்டிடங்கள் வெகு சிறப்பாக கட்டப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் மாணவர்கள் வரவும் அதிகரித்து வருகின்றது. எமது பாடசாலை எந்த இடையூரும் இன்றி கட்டப்பட்டு அதில் மாணவர்கள் சிறப்பாக கல்வியை தொடர வழிவகுக்க வேண்டும் என மாணவர்கள் இறைவனை வேண்டுகின்றனர். எதிர் காலத்தில் எமது பாடசாலை நகரப் புற பாடசாலைகளை விட சிறப்பாக கல்வி நடவடிக்கைகள் தொடரும் என்றால் அது மிகையாகாது. அத்துடன் க.பொ.த. (ச.த), க.பொ.த (உ/த) ஆகிய பர்ட்சைகளிலும் தற்போது சித்தியெய்திய மாணவர்களை விட பலமடங்கு மாணவர்கள் சித்தியெய்துவார்கள் என்று சொன்னால் மிகையாகாது.

**அ. சரசினி**
தரம் - 12
மட் / வாகரை ம.வி

# மருவி வரும் நாட்டார் பாடல்கள்



கிராம மக்கள் இயற்கையறிவும், கலையுணர்வும் கொண்டவர்கள். அவர்களின் உள்ளத்திலே பலபல காரணங்களினால் உணர்ச்சிகள் தோன்றிக்கரை புரண்டெழும் போது அவை பாடல்களாக வெளிவருகின்றன. அவை பாமரமக்களின் உள்ளத்துணர்ச்சியை உயிராகக் கொண்டவை. நாட்டு மக்களின் உள்ளத்திலிருந்து வெளிப்படுவன ஆகையால் அவை நாட்டார் பாடல்கள் எனப் பெயர் பெறுகின்றன. நாட்டார் பாடல்கள் சமுதாயத்தின் மிக முக்கியமாகனதொரு கலையாவதோடு, பண்பட்ட இசை வளர்ச்சிக்கு மூலாதாரமாகவும் விளங்குகின்றன. இவை பரம்பரை பரம்பரையாகச் செவிவழியாகக் கேட்கப்பட்டு வருபவை இலக்கண வரம்புக்கு உட்பட்டுச் சொற்சாலம் காட்டி மயக்குவனவல்ல இவ் நாட்டாரியல் பாடல்கள்.

மனித மனத்தின் இயல்பான உணர்வுகளின் அடிப்படையில் எழுவது பாடலாகும். பாடலுக்கு இணையாகவும் துணையாகவும் அமைவது ஆடல், ஆடலும் பாடலும் மனித உணர்வின் வடிகால்களாகும். அகத்தில் எழும் எண்ணங்களின் புற வடிவமாக வாழ்க்கையின் இயல்புகள் அமையும். அந்த இயல்புகளுக்கு தக்கவாறு கலைகள் உருவாகும். சிறந்த கலைகளான ஆடலும் பாடலும் மனித மனத்தில் எழும் உணர்ச்சிக் கொந்தளிப்பின் கோலச்சிதறல்கள் என்று கருதலாம். ஆடலும் பாடலும் அவனுடைய ஆரம்பகாலக் கலைகளாக அமைந்து இருக்க வேண்டும்.

அறிவு நிலையில் ஆதிமனிதன் என்று தோன்றி விளக்கம் பெற்றானோ அன்றே அவனுக்குக் கலை முகிழ்ப்பும் தோன்றி விட்டது. என்று கருதலாம். பாடல் இசையை அடிப்படையாகக் கொண்டது. மொழி உணர்ச்சிப் பெருக்கை ஒலி வடிவங்களாக்கிக் காட்டியிருப்பான் மொழிச் சிந்தனை எதுவும் இன்றி உணர்ச்சிக் கோலமாக எழுந்த ஒலியமைப்புப் பாடல்களே நாட்டுப்புறப் பாடல்களின் முதல் நிலை என்று கூறலாம்.

மனித இனம் எங்கெல்லாம் வாழ்ந்ததோ அங்கு எல்லாம் அவரவர் இயல்புகளுக்கும் வாழ்க்கை முறைகளுக்கும் ஏற்றவாறு வாய்மொழிப் பாடல்கள் அகவுணர்வுப் பாடல்களாக விரிந்து படர்ந்துள்ளன. வாய்மொழிப் பாடல்களின்

தோற்றுவாய் மனித உணர்வுகளின் முகிழ்ச்சே ஆகும். நாட்டுப்புறப் பாடல்கள் முதன் முதலில் ஒரு தனி மனிதனால் படைக்கப்பட்டாலும் கூட உடனே அவை ஒரு சமுதாயத்திற்குப் பொதுமையாக்கப்படுகின்றன. ஒரு சமுதாயத்தைச் சார்ந்த மக்களின் எண்ண ஓட்டங்கள் அங்கே சங்கமிக்கின்றன.

எழுத்திலக்கியம் இல்லாத மனித இனங்கள் உண்டு வாய்மொழி இலக்கியம் இல்லாத மனித இனங்கள் உலகில் எங்கும் இல்லை. வாய்மொழி இலக்கியங்கள் எழுத்திலக்கிய முன்னோடிகள் என்பதை எவரும் மறுக்க முடியாது. நாட்டின் வரலாற்றினை அறிந்து கொள்ள இலக்கியம் ஒரு மூலமாகக் கருதப்படுகின்றது. ஏட்டு இலக்கியங்களை விட நாட்டுபுற இலக்கியங்கள் வரலாற்றுக்குப் பேருதவி செய்கின்றன வரலாற்று, மூலங்கள் கிடைக்க வாய்ப்பில்லாத நாடுகளில் நாட்டுபுற இலக்கியங்களே துணை புரிகின்றன நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு நாட்டினுடைய உண்மைத் தன்மையையும் அந் நாட்டினுடைய பண்பாடுகளையும் தெள்ளத் தெளியக் காட்டும் சிறப்பினை பெற்றிருக்கும்.

மனித சமுதாயத்தில் முதன் முதலில் தோன்றிய இசை நாட்டுப்புற இசையாகும். பின்னர் இப் பாடல்களின் மெட்டுக்கள் இசை இலக்கண விதி முறைகளின் படி பெற்றுப் பண்களாகவும், இராகங்களாகவும் உருவெடுத்தன. இவை மனித கலாசாரத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதுடன் இதிலிருந்து பின்னர் சாஸ்திரிய இசையாக வளர்ச்சி பெறுவதற்கும் இவ்விசை மரபு அடிப்படையாக இருந்தது. எனவே நாம் தற்போது நாட்டார் இலக்கிய தோற்றம் பற்றிய உண்மைகளை கண்டறிந்து உள்ளோம்.

அடுத்து நாட்டார் பாடல்களின் வகைகளை உற்று நோக்குவோம். நாட்டுப்புறப் பாடல்கள் கிராமங்களிலேயே தோற்றம் பெற்றன. அவற்றிலே உழவர் பாடல், மீனவர்பாடல் என்ற அடிப்படையிலே கிராம மக்கள் உழுதல், விதைத்தல், களைபிடுங்கல், அரிவெட்டுதல், உப்பட்டிகட்டுதல், சூடுமிதித்தல், ஏற்றம் இறைத்தல், நெல்குத்துதல், வண்டி ஓட்டுதல், படகு ஓட்டுதல் போன்ற தொழில்களை களைப்பு தெரியாமல் செய்ய நாட்டுப்புறப் பாடல்களைப் பாடினர். இவற்றோடு குழந்தைப் பாடல்கள், ஒப்பாரி பாடல்கள், தலாட்டு பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், விளையாட்டு பாடல், சிறுகைத்தொழில் பாடல் என்று பலவகைப் பாடல்கள் எழுந்தன.

அவற்றுள் தலாட்டுப் பாடலை நாம் நோக்குகையில், தாய்மார்கள் பிள்ளைகளுக்குப் பாலூட்டுவார்கள் அதன் பின்பு நித்திரைக்காக பிள்ளைகள் அழும் அச்சந்தர்ப்பத்தில் அவர்களின் அழுகையை நிறுத்துவற்காகவும் தூங்கவைப்பதற்காகவும் மனம் போன போக்கில் பாடுவார்கள். அப்படி பாடும் பாடல்களில் ஒன்று பின்வருமாறு.

"ஆராரோ ஆராரோ

ஆரிரரோ ஆரிரரோ

ஆரடித்து நீ அழுதாய்

கண்மணியே கண்ணுறங்காய்"

என்று பாடல் தொடர்ந்து செல்லும் தாய் தனது உறவினர் ஒவ்வொருவரையும் சொல்லி அவர்கள் அடித்தார்களோ என்று கேட்பதாக இப் பாடல் அமையும்.

அடுத்து நாம் விளையாட்டுப் பாடல்களை எடுத்து நோக்குகையில் பல்வேறு வகையான விளையாட்டுக்களில் பாடல்கள் காணப்படுகின்றன. அவை பற்றி நாம் நோக்குவோம்.

கிராமத்து சிறுவர்களால் கிட்டிப்புள் எனும் ஒரு வகையான விளையாட்டு விளையாடப்படும். இவ் விளையாட்டிலே இரு அணி காணப்படும். கிட்டிப்புள் என்பது ஒரு தடியைக் கொண்டு விளையாடுவதாகும். இவ்விளையாட்டிலே தோல்வி உற்ற சிறார்களால் ஒரு வகையான பாடல் பாடப்படும் அப் பாடல் பின்வருமாறு அமையும்.

"ஆலையிலே சோலையிலே

ஆலம் பாடி சந்தையிலே

கிட்டிப்புள்ளும் பம்பரமும்

கிறுக்கி அடிக்க பாலாறு

பாலாறு பாலாறு..............."

என அவர்களது மூச்சை அடைக்கிக் கொண்டு பாடுவார்கள். அடுத்து கபடி எனும் நம் நாட்டு தேசிய விளையாட்டினை கிராமத்துச் சிறார்கள் மட்டுமல்லாது இளைஞர்களும் இக் கவடியை விளையாடுகின்றனர். இவ் விளையாட்டின் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக பின்வரும் பாடலை பாடுவர்.

"கபடி யடிக்க கபடியடிக்க

கைகால் முறியக் கைகால் முறியக்

காலுக்கு மருந்து தேடிக்கட்டு தேடிக்கட்டு.....................

மரம் பட்டை மருதம் பட்டை

வெளவ்வாலோடிய தென்னம் பட்டை

பூம் பட்டை புளியம் பட்டை

பட்டணம் பட்டணம் பட்டணம்....................."

என மிகவும் இன்சுவையோடு பாடுவர். இவ்வாறாக விளையாட்டுப் பாடலை எடுத்து நோக்குகையில் மிகவும் சுவாரஸ்யமாக அமையும்.

அடுத்ததாக நாம் உழவர் பாடலை எடுத்து நோக்குகையில், எமது நாட்டைப் பொறுத்த வரையில் உழவுத் தொழிலே மிகப் பிரதான அமைகின்றது. இவ் உழவுத் தொழில் அனேகமாக கிராம புறங்களில் மேற்கொள்வதால்· கிராமிய மக்கள் அக் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக பாடல் பாடுகின்றது. அத்தோடு தாம் பட்ட பாட்டிற்கு பலனாக பயிர் செழிப்பாக வளர்ந்து வருகையில் பின்வரும் பாடலை பாடுவர்.

"காடு வெட்டி களனி செய்து
கஷ்டப்பட்டு விதை விதைத்த
கதிர்மணியாய் சிரிக்குது இங்கோ - பாருங்கடா
களத்து மேட்டில் அறுத்து போடுங்கடா
தந்தன தானா தந்தன தானா ....................."



மீன்பிடிக் கிராம மீனவர்களால் மீன் பிடிக்கச் செல்லும் போது, படகு வலிக்கும் போது, மீன்பிடிக்கும் போது, வலை இழுக்கும் போது, தூண்டில் போடும் போது எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடல் பாடப்படும். அவர்கள் பாடல்களில் ஒன்று தான் கீழ்வரும் பாடலாகும்.

"தம்பியே தங்கப்பா - என் படகு
தண்ணீரிலே சலசலா - என் படகு
தாவு மரம் என் படகு - சலசலா
தேக்கமரத்தாலே - என் படகு - சலசலா
தேர்ந்தவன் செய்தானே என் படகு - சலசலா .................."

என அமையும்.

அடுத்து நாம் கேளிக்கைப் பாடலை நோக்குகையில், கிராமத்தை பொறுத்தவரை அம் மக்கள் ஆண், பெண் இன வேறுபாடு இன்றி சகஜமாக பழகுவர். அச் சந்தர்ப்பத்திலே கிண்டல், கேளிக்கை என்பவற்றை பாடலாக பாடியே மகிழ்வர் அவ்வாறான பாடல்கள் பின்வருமாறு.

"எருக்கலம்பிட்டிக்கு
எருக் கொண்டு போற தம்பி
மச்சான் கண்டா
மயில் வரட்டாம் என்று சொல்லு"

இப் பாடல் கிராமிய ரீதியாக முன்னைய காலத்தில் பெரும் செல்வாக்கை பெற்று இருந்தது. மற்றும்,

"எட்டு நாளாகச் செத்துகிடந்த
எட்டிப் பாம்பை

எட்டி நின்று பார்த்தான்
என் அருமை மச்சான்"

இவ்வாறான பாடல்கள் மிகவும் சிறந்த முறையில் முன்னர் பாடப்பட்டது. ஆனால் இப்போது வழக்கமில்லை. அடுத்து கிராம மக்களால் சிருங்கார ரசப் பாடல்களும் பாடப்படுவதுண்டு அவ்வாறு பாடப்பட்ட பாடல்களில் ஒன்று திரைப்படத்திலும் பயன்படுத்தப்பட்டது. அது பின்வருமாறு

"ஊரார் உறங்கையிலே
உற்றாருந் தூங்கையிலே
நல்ல பாம்பு வேடங் கொண்டு
நான் வருவேன் ............"

என மிக இனிமையாக அமையும் பாடல் இது. அடுத்து மருத்துவிச்சி பாடலும் பாடப்படுகிறது. இது மருத்துவிச்சி மருத்துவம் பார்க்கும் போது நோயாளிக்கு வலி தெரியாமல் இருக்க பாடப்படுவது.

'அரிசிப் பொதியோடும் வந்தாரோ தம்பி
அரிசி மலை நாடுங் கண்டீரோ தம்பி"

என அமையும்.

இசை எனும் பகுதியில் மேற்கண்டவாறான பாடல்வகை அமையும் இதைவிட ஆடலும் பாடலும் சேர்ந்த நாடகம் எனும் பகுதியிலே கும்மி, கோலாட்டம், மகுடி, காவடி போன்ற கிராமிய நடன வகைகள் இடம்பெறும். இவ்வகை நடனமானது முன்னர் திருவிழாக் காலங்கள் மற்றும் பண்டிகைக் காலங்களில் ஊர் தோறும் நடப்பது வழக்கம் அதற்குரிய உடை அலங்கார தாளலயம் என்பவற்றை சிறப்பான முறையில் கையாண்டனர்.

முத்தமிழில் ஒன்றாகிய நாடகத்தமிழ் முக்கியமாக ஆடற்கலையையே பொருளாகக் கொண்டது. இக் கலைக்கும் நாட்டு மக்களின் ஆடற்கலையே தோற்றுவாயாக உள்ளது. நாட்டார் பாடல்களில் பல கூட்டாக பாடுவதற்கென்றே அமைந்தவை கும்மி, கோலாட்டம் போன்ற விளையாட்டுப் பாடல்களும், வசந்தன் போன்ற கொண்டாட்ட பாடல்களும் ஆடலை முக்கியமான அமிசமாக கொண்டவை. உதாரணமாக கும்மி பாடல்களின் ஒன்று

"தன்னானே நாதினம் தன்னானே - தன
தன்னன நானினம் தன்னானே"

என்பது போன்ற தருக்களும் கோலாட்டப் பாடலிலே வரும்.

"தினதந்தினா தினதந்தினா
தினதந்தினா தின்னா
தினதந்தினா தினனா

தின்னாதி னாதந்தின
தின்தந்தினா தினனா"

என்பது போன்ற தருக்களும் நாட்டுப் பாடல்களிலே உள்ள ஆடற்கலை அம்சங்களை எடுத்துக் காட்டும். நாட்டு மக்களிடம் எத்தனையோ வகையான ஆடல்கள் ( Folk Dance) உள்ளன.

அடுத்து நாம் நாட்டார் பாடல்களில் இடம் பெறும் அழகியல் அம்சங்களை நோக்குவோம். நாட்டார் பாடலை பொறுத்தவரை பாமரமக்களால் வாய்வழியாக பயிலப்படுவதால் இலகு முறையிலும் இலக்கண சொல்லமைதி கொண்டனவாகவும் காணப்படும்.

உதாரணமாக எதுகை, மோனை போன்ற இலக்கண சிறப்பம்சம் உடையனவாகக் காணப்படும். அத்தோடு உவமை உருவகங்கள் மிகப் பொருத்தமாகவும் அழகாகவும் இயல்பாகவும் கையாளப்படும். இந்த உவமைகள் ஏட்டில் கவிதைகளில் புலவர்கள் பொதுவாக கையாள்வதிலும் பார்க்க சுவையுடையனவாக இருக்கும். உதாரணமாக ஒரு பெண்ணுக்கு மணப் பேச்சு நடை பெறுகின்றது. அந்த ஆண் எப்படியானவன் என்று அவள் தோழியிடம் விசாரிக்கிறாள். தோழி அந்த மாப்பிள்ளையை நையாண்டி பண்ணும் போக்கிலே வருணிக்கிறாள். நகைச்சுவையோடு பொருந்திய புதுமையான உவமையை கையாளுகிறாள்.

"கச்சான் அடித்த பின்பு காட்டில் மரம் நின்றது போல
உச்சியில் நாறு மயிர் ஓரமெல்லாம் தான் வழுக்கை"

இது எவ்வளவு அருமையாக அமைந்துள்ளது அல்லவா? இவ்வாறே நாட்டார் பாடலானது பல்வேறு அழகியல் அம்சங்களை தன்னகத்தே கொண்டு சிறப்புற்று விளங்கின்றது என்று உள்ளங்கையில் நெல்லிக்கனி போல் யாவரும் அறிந்ததே.

இவ்வாறாக நாட்டார் பாடல்கள் செல்வாக்குப் பெற்றுக் காணப்பட்ட போதிலும் தற்காலத்தை பொறுத்த வரை அடி அழுகியே காணப்படுகின்றது. அக் காலத்தில் நாட்டார் பாடல் பெருவழக்காக இருந்த போதும் தற்போது நிரையிசைப் பாடலே முக்கியம் பெற்று காணப்படுகின்றது. திரையிசைப் பாடல் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது நாட்டார் பாடலான போதும் தற்போது நாட்டார் பாடல் மழுங்கடிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக,

"கண்ணும் கண்ணும் பார்த்துக்கிட்டா
டிங் டிங் டிங் ................"

என்று அமையும் திரையிசைப் பாடல் தோன்றுவதற்கு அடித்தளமாக அமைந்தது. பின்வரும் நாட்டார் பாடலே ஆகும்.


"கத்தி கொடுத்து கம்பு வாங்கினேன்
டிங் டிங் டிங்
கம்பு கொடுத்து அச்சம் வாங்கினேன்
டிங் டிங் டிங் ..........."

என அமையும்.

இவ்வாறான அடி அழுகி உள்ள நாட்டார் பாடலை துளிர் விட்டு மலரச் செய்வது எம் கைகளிலே உள்ளது. உதாரணமாக பேராசிரியர் சு. வித்தியானந்தன் என்பவர் 1960ல் மட்டக்களப்பு நாட்டார் பாடலையும் 1964ல் மன்னார் நாட்டார் பாடலையும் தேடிப் பெற்று நூல் வடிவம் கொடுத்தார்.

இவ்வாறாக பாரம்பரியங்களைத் தம் உதிரமாகக் கொண்டு விளங்கிய நம் தேசமானது மேலும் விருத்தி அடைந்து விருட்சமடைவது குடிமக்களாகிய நம் கரங்களிலே உள்ளது. ஒரு நாட்டின் பெருமையும், சிறப்பும் அதன் பாரம்பரியங்களிலே உள்ளது. என்பது ஆணித்தரம் ஒரு நாட்டின் சிறப்புக்கு அதன் ஆதியே காரணம் இலங்கை முன்னர் எவ்வாறான கலைகளைக் கொண்டு காணப்பட்டது என்பது யாவரும் அறிந்ததே எனவே எம் பாரம்பரியமாகிய நாட்டாரிலக்கியத்தை கட்டி எழுப்பி எம் நாட்டுக்கு கலையுணர்வு கூட்டுவோம் குடிமக்களாகிய நாம்.

**ச. ரவிச்சந்திரன்**
சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
சமூர்த்தி வங்கி
கதிரவெளி.



## கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலக கலாசார விழா – 2008

## போட்டி முடிவுகள்

### கட்டுரைப் போட்டி

**கனிஷ்ட பிரிவு**

1ம் இடம் - ம. கிருஸ்ணவேணி - மட் / பனிச்சங்கேனி திருமகள் வித்தியாலயம்.

2ம் இடம் - இ. வினித்தா - மட் / வம்மிவெட்டுவான் வித்தியாலயம்.

3ம் இடம் - பு. ஜீவஜோதி - மட் / கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

**சிரேஷ்ட பிரிவு**

1ம் இடம் - சி. சுகாஷினி - மட் / வாகரை மகா வித்தியாலயம்.

2ம் இடம் - இ. உதயேஸ்வரி - மட் / பனிச்சங்கேணி வித்தியாலயம்.

3ம் இடம் - ந. நிசாந்தன் - மட் / கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

### கவிதைப் போட்டி

**கனிஷ்ட பிரிவு**

1ம் இடம் - யோ. சுபதர்சினி - மட் / வம்மிவெட்டுவான் வித்தியாலயம்.

2ம் இடம் - தே. சிறிப்பிரியா - மட் / கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

3ம் இடம் - ம. சுலக்ஷன் - மட் / பனிச்சங்கேனி திருமகள் வித்தியாலயம்.

**சிரேஷ்ட பிரிவு**

1ம் இடம் - கு. வசந்தராஜ் - மட் / கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

2ம் இடம் - வீ. பிறேமளா - மட் / கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

3ம் இடம் - இ. கம்சலா - மட் / பனிச்சங்கேனி திருமகள் வித்தியாலயம்.

## சிறுகதைப் போட்டி

**கனிஷ்ட பிரிவு**

1ம் இடம் - சி. சத்தியசிலன் - மட் / கட்டுமுறிவுக்குளம் அ.த.க பாடசாலை

2ம் இடம் - பே. கலங்கனி - மட் / கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

3ம் இடம் - வை. கௌரி - மட் / கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

**சிரேஷ்ட பிரிவு**

1ம் இடம் - கி. சர்மிளா - மட் / வாகரை மகா வித்தியாலயம்

2ம் இடம் - சி . சிந்துஜா - மட் / பனிச்சங்கேனி திருமகள் வித்தியாலயம்

## கிராமிய நடனம் (குழு)

1ம் இடம் - மட் / வம்மிவட்டவான் வித்தியாலயம்

2ம் இடம் - மட் / பனிச்சங்கேனி திருமகள் வித்தியாலயம்

## தனி நடனம்

1ம் இடம் - செ. டென்ம நோஜினி - மட் / பனிச்சங்கேனி திருமகள் வித்தியாலயம்

2ம் இடம் - சு. வளர்மதி - மட் / கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம்

# நன்றிகள்

✳ வாகை எனும் சிறப்பு மலர் வெளியீட்டிற்கு ஆசிச் செய்தி வழங்கிய மட் /இராமகிருஸ்ண மிசன் சுவாமிகள்

✳ வாகை சிறப்புறச் செய்வதற்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய மட்டக்களப்பு மாவட்ட பதில் அரசாங்க அதிபர்.

✳ பிரதேச கலாசார பேரவை அமைத்து சிறப்பு மலர் வெளியிட ஆலோசனைகளை வழங்கியதுடன் வாழ்த்துச் செய்தி வழங்கிய எமது பிரதேச செயலாளர்.

✳ வாழ்த்துச் செய்தி வழங்கிய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்

✳ கலாசார விழாவிற்கும் நூல் வெளியீட்டிற்கும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் மற்றும் வாகை என்னும் பெயரினை தெரிவு செய்த உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் கணக்காளர் மற்றும் எமது செயலக நிர்வாக உத்தியோகஸ்த்தர்.

✳ வாகை மலர் வெளியீட்டிற்கும் ஏனைய செலவுகளுக்குப் பொறுப்புக்களை ஏற்ற GTZ நிறுவனம் மற்றும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்கள்.

✳ போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்ற ஊக்கமளித்த ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள்.

✳ கிராமசேவை உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்.

✳ இம் மலரினை சிறப்பாக அச்சிட்டு தந்த மட் / எவகிறீன் அச்சகம்

✳ ஆக்கங்களை வழங்கி மலரினை சிறப்புறச் செய்வதற்கு உதவிய அனைவருக்கும்.

✳ மற்றும் தவறவிடப்பட்ட அனைவருக்கும்.

**ப. சிவராம்.**

**கலாசர உத்தியோகஸ்தர்.**



Evergreen Printers, Batticaloa. ✆ 065-2222607